உடன் பெற்றுக் கொள்ளலாம்.
● மிகவும் சொகுசானது
● அதிகம் கவர்ச்சியானது
● விரும்பிய கலர்களில் கிடைப்பது.
பல்க்கன்ஸ்கூட்டர்கள்
['FALCON SCOOTERS']
பல்க்கன் ஏஜென்சி
ஐந்து சந்தி
யாழ்ப்பாணம்,
போன்:685

பக்கங்கள் 8

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

மலர் 21 மார்கழி 18 ஸபர் 13 இதழ் 324
யாழ்ப்பாணம் புதன்கிழமை 2-1-80

RECEIVED
1980 -12- 2
PERIODICALS DIVISION
UNIVERSITY JAFFNA CAMPUS LIBRARY

பிளவ்ஸ் கிறீம்ஹவுஸ் வழங்கும்
16 வயதினிலே
பொங்கலன்று
இறந்த வெளியாகில்
● ஈழத்து
பாலசுப்பிரமணியம்
● சுஜதா அத்தநாயக்கா
● சாந்தி கணபதிப்பிள்ளை
பிரவேசம்: 10-5-3
ரிக்கற்: பூபாலசிங்கம், பு...
தகசாலையிலும், நியூ பிள...
...லும் பெற்றுக்கொள்...
லாம். முந்துங்கள்!

# 'ஜனநாயக பாரம்பரியம் பாதுகாக்கப்பட வேண்டும்"

## சகலமக்களுக்கும் நன்மை அளிப்பது அரசின்கொள்கை

### ஜனதிபதி மீண்டும் வலியுறுத்து

(அனுராதபுரத்திலிருந்து நமது நிருபர் எஸ். மகாலிங்கசிவம்)

**''சோஷலிஸத்தின்கீழ் அமைந்த பொருளாதாரக் கொள்கைதான் நமது நாட்டுக்குச் சிறந்தது. எமது வளர்ச்சிக்கு உதவக் கூடியது. ஆனல் இதனைத் துஷ்பிரயோகம் செய்ய அனுமதிக்கக் கூடாது! ஜனநாயகத்தையும் சோஷலிஸத்தையும் கொண்ட ஒரு கூட்டுக் கொள்கையைத்தான் அரசு கொண்டுள்ளது. எமது நாட்டில் ஜனநாயகம் இன்றும் உயிர்பிழைத்திருப்பதற்கு முக்கிய காரணம் பௌத்தமதம் நமது நாட்டில் வேரூன்றியிருப்பதே.**

இவ்வாறு, ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று இங்கு ஜேத்தவன தாதுகோபுர புனருத்தாரண வேலைகளை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அனுராதபுரம் நகரின் நாற்புறமும், வெண்ணிற ஆடை அணிந்த பல்லாயிரக்கணக்கான பக்தகோடிகளினல் சூழ்ந்திருக்க; ஆயிரத்துக்கு மதிகமான கலைஞர்கள் இசை முழங்க; நூற்றுக்கணக்கான பௌத்தபிக்குமார்கள் பிரித் ஓத; ''அரோகரா'' என்ற கோஷம் வானைமுட்ட சரியாக நேற்றுப் பிற்பகல் 2-25 சுப நேரத்தில் ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன, சரித்திரப் பிரசித்திபெற்ற உலகின் மிகப் பெரும் தாதுகோபுரமான

(8-ம் பக்கம் பார்க்க)

நல்லெண்ண விஜயம்:

## வடபகுதி இளைஞர், யுவதிகளுக்கு வென்னப்புவவில் வரவேற்பு!

### "நாட்டின் ஒற்றுமையே அரசின் நோக்கம்"

(வென்னப்புவ)

வடபகுதியைச் சேர்ந்த சுமார் 1000 தமிழ் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்ரஸ் பெரேரா தலைமையில் இங்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

யாழ் மாவட்ட ... சேர்ந்த சகலதொகுதிகளிலிருந்தும் சுமார் 1000 இளைஞர்களும் யுவதிகளும் வடபகுதி ஐ.தே.க. அமைப்பாளரும், பருத்தித்துறை நகரசபை உறுப்பினருமான திரு. சந்திரசேகரம் தலைமையில் 15 பஸ்களிலும், 2 லொறிகளிலும் இங்கு வந்துசேர்ந்தனர்.

அதி. வண. பெர்ணண்டோ ஆண்டகை அவர்களை வேற்று அழைத்துச்சென்... கடற்றொழில் அமைச்சர் தி... பெஸ்ரஸ் பெரேரா, வடப... ஐ. தே. கட்சி பிரதம அமை... பாளர் திரு. கணேசலிங்... ஆகியோர் இவர்களை வரவே...றனர்.

அமைச்சர் திரு. பெஸ்... பெரேரா வரவேற்றுப் ... கையில் கூறியதாவது:

''நாட்டில் ஒற்றுமை வ... வேண்டும் என்று அரசு வி... புகிறது. வடக்கு, தெ... சிங்கள தமிழ் வேற்று... யின்றி எல்லோரும் இந்நா...டின் அபிவிருத்திக்காக உ...க்கவேண்டும். வடக்கு தெ...

(3-ம் பக்கம் பார்க்க)

★ தேர்தல் நாளை ஆரம்பமாகிறது!

## இந்தியாவின் புதியபிரதமர் எட்டாம் திகதி தெரியும்!

### தமிழகத்தில் இரு தொகுதிகளில் நாளை நேரடிப் போட்...

(புதுடில்லி)

**சுதந்திர பாரதத்தின் ஏழாவது பாராளுமன்றத்துக்கான (லோகசபை) இடைக்காலத் தேர்தல், நாளைஆரம்பமாகிறது. முதல்கட்டத்தேர்தல் நாளையும், இரண்டாம் கட்ட இறுதித் தேர்தல் ஆறும் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும்.**

தேர்தல் முடிவுகள், ஞாயிற் றுக்கிழமை மாலை முதல் வெளி யாகுமென்று நேற்று அறிவிக் கப்பட்டது.

இந்தியாவின் ஏழாவ... பாராளுமன்றத்தை அ... கரிக்கப் போகிறவர் - புதி... பிரதமர் யார் என்ப... அநேகமாக எட்டாம் திக... செவ்வாய்க்கிழமை முற்... கத் தெரிந்துவிடும்!

இந்திய பாராளுமன்ற...தின் மொத்த ஆசனங்கள் 54... ஆகும். இவற்றில், 52... தொகுதிகளுக்கு மட்டு...

(8-ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீரமண மஹர்ஷிகளின் நூற்றுண்டு ஜயந்தி விழா

### இன்று, நாளைய நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். திவ்வியஜீவனசங்க சங்கமண்டபத்தில் ஆரம்பமான பகவான் ஸ்ரீரமண மஹர்ஷிகளின் நூற்றுண்டுஜயந்தி விழா நாளைவரை நடைபெறும்.

இரண்டாம் நாளான இன்று மாலை அருணசல புராணபடனம், பக்திப் பாடல்கள், சொற்பொழிவுகள், சத்சங்கம் ஆகியன இரவு முழுவதும் நடைபெறும்.

மூன்றும் நாளான நாளை காலை 6-30 மணி திரு. சந்தானகிருஷ்ணன் கோஷ்டியினரின் மங்கள இசையுடனும், அருணசல சிவ பஜனையுடனும் பகவானின் திருவுருவப்படத்துடன் ஊர்வல மார்க்கம் திவ்விய ஜீவன் சங்க மண்டபத்திலிருந்து புறப்பட்டு, பருத்தித்

(8-ம் பக்கம் பார்க்க)

ஆதரவாளர்களுக்கு எமது அன்பு கனிந்த புதுவருட நல்வாழ்த்துக்கள்!
இப் புதுவருடத்தில் எமது விவசாய நண்பர்களின் நன்மை கருதி "றெபின்'' சென்றிக் வாட்டர் பம்புகள் ஓர் குறிப்பிட்ட தொகை முற்கூட்டியே இறக்குமதி செய்து கையிருப்பில் வைத்திருக்கின்றோம். விலை உயர்வுக்கு முன் உங்கள் தேவைகளுக்கு உடனே விஜயம் செய்யுங்கள்
"நியூ ரோன் எலெக்ரிக்கல்ஸ்"
சகல மின்சார உபகரணங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
141 - 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன்: 7016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மின் சாரத்தால் இயங்கக்கூடிய நீரிறைக்கும் இயந்திரம் விற் பனைக்குண்டு. தொடர்பு கொள்க: மிஸ்கின்ஸ், 1, பெரியகடை, யாழ்ப் பாணம். 4540

நல்லநிலையிலுள்ள வொக்ஸ் வெக்கன் கார் VOLKS WAGEN விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும், S.செல்லத்துரை, பலாலிவீதி, திருநெல்வேலி வடக்கு. 4533


# பயிர் நஷ்டஈடாக ஐந்து லட்சம் ரூபா!

(வேலணை)

''கடந்த காலபோகத்துக் கான பயிர்க் காப்புறுதி நஷ்ட ஈடாக யாழ்ப்பாண மாவட் டத்தில் ஐந்து லட்சத்து முப் பத்தெட்டாயிரம் ரூபா கொடுக்கப்படவுள்ளது''

இவ்வாறு பயிர்க் காப்புறுதி பிராந்தியப் பணிப்பாளர் திரு. சுப்பையா சிவகுரு வேலணை கமநல சேவை நிலை யத்தால் நடத்தப்பட்ட விவ சாயிகள் விழாவில் பேசுகை யில் கூறினார்.

யாழ் மாவட்ட கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. க. பரம லிங்கம் தலைமையில் புங்குடு தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து உரை யாற்றுகையிய், ''கடந்த காலபோகங்களில் 20 வீத மான விவசாயிகளே பயிர்க் காப்புறுதியில் பங்குபற்றி இருக்கின்றார்கள். வேலணை கமநலசேவை நிலையத்தால் கடந்த காலபோகத்தில் மட் டும் 36 ஆயிரம் ரூபா பயிர் காப்புறுதி நஷ்ட ஈடாகக் கொடுக்கப்பட்டுள்ளது'' என் ருர்.

......



## சமாதானநீதவான்

சித்தன்கேணியைச் சேர்ந்த சிற்பக் கலைஞரும், ஓவியக் கலைஞருமான ஆசிரியர் திரு. வே. கந்தசாமி, யாழ். மாவட் டச் சமாதான நீதவானுக நியமிக்கப்பட்டுள்ளார்.

நவாலி ஶ்ரீமன் கத்தோ லிக்க தமிழ்க் கலவன் பாட சாலையில் ஆசிரியராகக் கடமை யாற்றும் இவர், சிறந்த சமூக சேவையாளருமாவார். சித்தன்கேணி சிவச்செல்வி வெளியீட்டுக் கழகம், நகுலன் வெளியீட்டுக் கழகம் ஆகிய வற்றின் செயலாளராக இருந்து, இரண்டு சிறுகதைத் தொகுதிகளையும் வெளியிட்டு இலக்கியப் பணி புரிந்துள் ளார்.

## தாசன் பிணையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர சுவரில் சுலோ கம் எழுதியதாக ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட மாணிக்கம் தாசன், பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

யாழ். மேல் நீதிமன்ற நீத வான் ஜனுப் ஜமீல் முன்னிலை யில் நேற்று ஆஜர்செய்யப் பட்டபோது சந்தேக நபர் 3,500 ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்து, மீண்டும் ஜனவரி மாதம் 28-ம் திகதி யாழ். நீதிமன்றத்தில் ஆஜ ராக வேண்டுமென்று நீதிபதி உத்தரவிட்டார்.

சந்தேக நபர் சார்பில் சட் டத்தரணி திரு. ஜிம்மி ராஜ ரத்தினம் ஆஜராஞர்.

## ரூபா 33,000 திருட்டு!

(யாழ்ப்பாணம்)

வீடு உடைத்து, ரூ. 33,000 பெறுமதியான புடவைகள் நகைகள், ரொக்கம் ஆகிய னவை திருட்டுப்போன சம்ப பவம், சுண்டிக்குளியில் நிகழ்ந் துள்ளது.

சுண்டிக்குளியைச் சேர்ந்த சிவலிங்கம் அம்பிகாதேவி என்பவரது வீட்டின் யன்னல் உடைக்கப்பட்டு அலுமாரி யில் இருந்த மேற்படி நகை யும், ரொக்கமும், புடவை களும் திருடப்பட்டதாக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுசம் பந்தமாக கரையூர் பொலி சார் விசாரணை நடத்திவரு கின்றனர்.

## தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவுக் கூட்டம் யாழ். மாநகர மண்டபத்தில் இம்மாதம் 10ந் தேதி மாலை நடைபெறவிருக்கிறது.

யாழ். மாநகர மண்டபம், சினிமாத் தியேட்டராக இரு ந்து மாறியபின் முதல்தடவை யாக நடக்கும் பொதுநிகழ்ச்சி இதுவாகும். (க-அ)

......

## 9ந் திகதி யாழ். மேயர் வருகிருர்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடு சென்றுள்ள யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் இம்மா தம் 9ந் தேதி யாழ்ப்பாணம் வந்துசேருவார். (க)


## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# "யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தி ஆண்டு 1979"

## யாழ். அரசஅதிபர் விடுக்கும் புத்தாண்டுச் செய்தி

(யாழ்ப்பாணம்)

''1979-ம் ஆண்டினை யாழ்ப் பாண மாவட்ட அபிவிருத்தி யில் குறிப்பிடத்தக்க கால மென்று கூறலாம். நிர்வாக அபிவிருத்தித்துறைகளில் மிக வும் குறுகியகாலத்தில், கூடிய தான சாதனைகளை மாவட்ட அமைச்சு இக்காலகட்டத்தில் நிறைவேற்றிவைத்துள்ளது. நிர்வாகம் பன்முகப்படுத்தப் படவேண்டும் என்ற அரசாங் கத்தின் கொள்கையினுல், மாவட்ட அமைச்சு அமைந் தது. மாவட்ட அமைச்சு அபிவிருத்தித் திட்டங்களை தடங்கலின்றி செயலாக்கியது. இக் காரணத்தினுல் ஏனைய மாவட்டங்களைப்போல, யாழ்ப்பாண மாவட்டமும் கூடிய விரைவில் அபிவிருத் திப் பாதையில் காலடிஎடுத்து வைக்கமுடிந்தது. பாரிய வீட மைப்புத் திட்டங்கள் மத்திய தர வகுப்பாருக்கு ஒதுக்கப் பட்டது. பத்து இருபது வீடு கள் வீடற்றவருக்காக அர சினுல் நிர்மாணிக்கப்பட்டது. கன்பொல்லைபோன்ற இடங் களில் மாதிரிக்கிராமங்களுக் கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. கல்வி, நீர்ப்பாசனம், விவசாயம், பெருந்தெருக்கள் போன்ற துறைகளின் அத்தியாவசிய தேவைகளுக்கு தீர்க்கமான திட்டங்கள் வகுத்து அவை செயற்பாடடைந்தன''

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட அமைச்சின் செய லாளரும் அரசாங்க அதிபரு மான திரு. யோகேந்திரா துரைசுவாமி விடுத்துள்ள புத் தாண்டுச்செய்தியில் தெரிவித் துள்ளார். தமது செய்தியில் அவர் மேலும் கூறுவதாவது:

'புத்தாண்டு பிறந்திருக்கும் இந்தவேளையிலே கடந்தகாலத் தின் விளைவுகளையும் எதிர் காலத்தின் விளைவுகளையும் எதிர்காலத் திட்டங்களையும் பற்றிச் சிந்திப்பது பயன்தரு கின்றதொரு விஷயமாகும்.

''விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் என்ற பிர தான துறைகளிற்கு ஏற்படுத் தப்பட்ட திட்டங்கள் அரச அங்கீகாரம்பெற்றன. முழங்கா வில் இளைஞர் குடியேற்றத் திட்டமும், யாழ்ப்பாண ஐஸ் தொழிற்சாலையும் பருத்தித்துறை கண்ணுடித் தொழிற்சாலையும் பொரு ளாதார அபிவிருத்தியையும் வேலைவாய்ப்பையும் நமது பிரதேசத்திற்கு அள்ளித்தரக் கூடியவை. புறக்கணிக்கப் பட்ட பல பகுதிகளின் தேவை கள், மாவட்டஅமைச்சினுல் தீர்த்துவைக்கப்பட்டுள்ளன. நயினுதீவுக்கு பஸ்சேவை, அனலைதீவு, எழுவைதீவு, ஊர்காவற்றுறையை இணைக் கின்ற மோட்டோர் படகுச் சேவை, அச்சுவேலி, கிளி நொச்சியில் அமைகிற விற் பனைத் திணைக்கள களஞ்சிய வசதிகள் போன்றவற்றை இதற்கு சில உதாரணங் களாகக் கொள்ளலாம்.

''நிர்வாகத்துறையில் நட மாடும் செயலகம் சிறப்பாக இயங்கியுள்ளது. பூநகரி, முழங்காவில் நெடுந்தீவு, அனலைதீவு, நயினுதீவு ஆகிய இடங்களுக்கு நாங்கள் சென்று நேரே மக்களின் பிரச்னைகளுக்கு நிவாரணம் கண்டிருக்கின்ருேம்,

''பிரதேச அபிவிருத்தி, நிர் வாகம், வேலைவாய்ப்பு என் பனவற்ருேடு கலாசாரத்துறை யிலும் மாவட்ட அமைச்சு அக்கறைகொண்டு உழைத்து வருகின்றது. விபுலானந்தர் நாவலர்பெருமான் ஆகி யோரை மக்கள் நினைவு கொள்ளவும், ஹிஜ்ராபோன்ற சமய விழாக்களை நடத்தவும் பாராட்டுக்குரிய முறையில் நடவடிக்கைள் மேற்கொள் ளப்பட்டன. இம் முயற்சி களை மேலும் விஸ்தரிப்போம். மகாவலி அபிவிருத்திக்காக சிரமதானப் பணிகளை மேற் கொள்ள தமிழ் இளைஞர்களை அனுப்புவதன் மூலம் மனித நேயம், இன ஒற்றுமை, தேசப்பற்று ஆகியன ஏற்படும் என்று இவ்வண்ணம் பாராட் டப்பட்டது. நேர்மையான சிந் தனை என்பனவே செயல் களின் வெற்றிக்கு மூலகார ணம். இதனை புதிய ஆண்டின் சிந்தனையாகக்கொள்வோம்.''

# "தாயகத்தின் சுபிட்சத்துக்கு இளைஞர்கள் உதவவேண்டும்"

## வணபிதா சிங்கராயர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

''வெளிநாடுகளில் எம் தமிழ் இளைஞர்கள் மிகவும் கஷ்டப்பட்டு உழைப்பதன் மூலம் கிடைக்கும் வருமானம் எமது தாயகத்தின் பொருளா தார சுபீட்சத்துக்கு உதவ வேண்டும்'' என்று வண பிதா. எம். சிங்கராயர் வெளிட்டுள்ள புத்தாண்டுச் செய்தியில் தெரி வித்துள்ளார்.

அவரது செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

''திரைகடல் ஓடியும் திரவி யம் தேடு' என்ற மூதுரையைப் பின்பற்றி பல ஆயிரக்கணக் கான இளைஞர்கள் வெளிநாடு களுக்குச் சென்று கஷ்டப்பட்டு உழைத்துவருகின்றனர். ஏரா ளமான இளைஞர்கள் இப் பொழுதும் சென்றுகொண்டி ருக்கின்றனர். இவர்கள் எல் லோரும் தாயகம் திரும்புகின்ற போது வசதியான வீடுகளைக் கட்டவும் உல்லாசமாகக் கார் களில் ஓடித்திரியவும் தமது உழைப்பைப் பயன்படுத்தா மல் எமது தாயகத்தின் பொரு ளாதாரத்தை வளம்படுத்த பாரிய திட்டங்களையும், தொழிற்சாலைகளையும் அமை க்கவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன். (கு)

## பதில் மேயரின் புத்தாண்டுச் செய்தி

(யாழ்ப்பாணம்)

''இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களின் மரபுவழித் தாயகமான தமிழ் ஈழம் மேற் கொண்டுவரும் விடுதலைப் பயணம் மலர்ந்திருக்கும் புத் தாண்டிலாவது பரிபூரண வெற்றியடையவேண்டுமென வாழ்த்துகிருேம்.''

இவ்வாறு யாழ். பதில் மேயர் திரு. பி. எவ். சேவியர் விடுத் துள்ள புதுவருடச் செய்தியில் தெரிவித்துள்ளார். ''எமது தாயகத்தின் பெருநகர் யாழ்ப் பாணத்தை நவீன நகரமாகக் கட்டி எழுப்ப பொதுமக்களும், வரியிறுப்பாளர்களும் இவ் வாண்டில் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்'' என்றும் அச்செய்தியில் அவர் கேட்டுள் ளார். (கு)

## திருவெம்பாவை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பர மேசுவரன் ஆலயத்தில் இறு தித் திருவெம்பாவைப் பூசை கள் இன்று சிறப்பாக நடை பெறவிருக்கின்றன. அதிகாலை 5 மணிக்குப் பூசை ஆரம்ப மாகி அபிஷேக ஆராதனை களும் இடம்பெறவுள்ளது. (வெ)


# முக்கிய அறிவித்தல்

தரக்குறைவான, போலிப் பெட்டர் டீசல் இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு 'பெட்டர் டைப்', 'பிஎச் மாடல்' என்றெல்லாம் ஏமாற்றி விற்பனை செய்யப்படுவதாக நாம் அறிய வந்துள்ளோம்.

கவனம்: நாம் இந்த இயந்திரங்களைப் பரீட்சித்துப் பார்த்தபோது செயற்திறன், நீடித்த பாவனை எரிபொருள் / எண்ணெய்ச் செலவு என்ப வற்றைப் பொறுத்தளவில் உண்மையான பெட்டர் டீசல்களின் விவரக் கூற்றுகளுக்கு ஏற்றதாக அமையவில்லை எனக் கண்டோம். மேலும், இந்த இயந்திரங்களின் உறுப்புகளை, எம்மிடம் கையிருப்பிலுள்ள அசல் பெட்டர் உறுப்புகளுடன் மாற்றீடு செய்யவும் முடியாது.

பெட்டர் கைத்தொழில் டீசல்கள் இங்கிலாந்தில் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன (வேறெங்கும் இல்லை) என்பதனையும் இவை இலங்கை யில் ஹேலீஸ் லிமிட்டெட்டால் மட்டுமே இறக்குமதி செய்யப்படுகின்றன என்பதையும் எமது வாடிக்கையாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் இத்தால் அறிவிக்கின்ருேம்.

தயங்காது எமது பண்டகசாலைக்கு விஜயம் செய்து உங்களுக்குத் தேவைப்படும் அசல், தரம் சிறந்த 3-16 எச். பி. தண்ணீர்ப்பம்புகள், கரும்பு அரைக்கும் இயந்திரங்கள் முதலியவற்றை விசேடமாகக் குறைக்கப் பட்ட விலைகளில் பெற்றுக்கொள்ளுங்கள். (பெட்டர் PH1 6-8 HP இயந்திரங்கள் ரூபா 17,200/-, பெட்டர் PH 2 14-16 எச். பி. இயந்திரங்கள் ரூபா 25,960/-.)

நாம் வழங்கும் விசேட சேவையின் ஒரு பகுதியாக, பெட்டர் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான வங்கிக் கடன்களைப் பெறு வதற்கும் உங்களுக்கு உதவிபுரிவோம்.

மேலதிகத் தகவலுக்கு நேரில் வரவும்-

அல்லது எழுதவும்:

**பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி,**

**ஹேலீஸ் லிமிட்டெட்,**

**25, பொஸ்டர் லேன், கொழும்பு-10,**

தொலைபேசி: 96331-6, 24164.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சாதனைகளை விரும்புகின்ற மனம் சோதனைகளுக்கு உட்படுவதற்கு தன்னைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.

— விவேகானந்தர்

## மக்கள் கருத்து

### பத்திரிகையில் உயர்வும் மக்களும்

ஐயா, இன்றைய வாரமலரில் (30-12-79) "அன்பார்ந்த வாசகர்களுக்கு" முன்பக்க பிரத்தியேகபகுதியை வாசித்து மிகமகிழ்ச்சியடைந்தேன்.

"ஈழநாடு" தமிழ்பேசும் மக்களின் உரிமையான தேசிய இதழாகும். எமக்கென்ற பத்திரிகை இது ஒன்றே என்பதை நாம் அறிவோம்.

கொழும்புத்தினசரிகள் திடீரென மிகஉயர்ந்த விலையை ஏற்றியபோதே 'ஈழநாடு'ம் விலையை அதிகரித்திருக்க வேண்டும். மக்கள் நலங்கருதி காலந்தாழ்த்தியே விலை அதிகரிப்பை கோரியுள்ளீர்கள்.

இன்றைய நிலையில் 'ஈழநாடு' பத்துச்சத அதிகரிப்புடன் எவ்வாறு தான் நடைபெறப்போகிறதோ என்பதில் எமக்கு ஐயப்பாடு ஏற்படுகிறது.

எனவே "ஈழநாடு" வாரமலர் எழுபத்தைந்து சதமாக்கப்படின் மிக நன்மையளிப்பதாக இருக்கும்.

ஏனைய தினப்பத்திரிகைகளின் விலை 'ஈழநாடு' தினசரிவிலையில் இருமடங்கு மும்மடங்காக இருக்கின்றன அவற்றின் விற்பனவும் அதிகமானவை எனவே வாரமலர் 75 சதமாவதை 'தமிழ்மக்கள்' ஈழநாடு அன்பர்கள் அனைவரும் வரவேற்பார்கள்.

சில்லறைத்தட்டுப்பாடான இக்காலத்தில் பத்திரிகை விற்பாளருக்கும் பத்திரிகை பெறுவோருக்கும் ஓரளவு நன்மையும் ஏற்படுகிறது என்பதையும் கருத்திற்கொண்டு 75 சதமாக்குவதை வரவேற்கவே செய்வர்.

என்றும் வாழ்க 'ஈழநாடு' வளர்க அதன் தொண்டு.

**க. நா. சோதிலிங்கம்**
செபத்தியார் வீதி, கோண்டாவில்.

### 30 ஆண்டு விபரங்கள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் கடந்த முப்பதாண்டுக்காலத்தில் நிகழ்ந்த அறவழிசார்ந்த நடவடிக்கைகள், போராட்டங்கள், கருத்தரங்குகள் பற்றிய விபரங்களைத்திரட்டி அறவழிவாழ்வு நடவடிக்கைகளின் வரலாற்றைத் தயாரிக்கும் பணியை அறவழிப் போராட்டக்குழுவினர் மேற்கொள்ளவுள்ளனர்.

இவைதொடர்பான விபரங்கள், புகைபடங்கள் ஆவணங்கள் இருப்பின் அனுப்பி உதவும்படி இக்குழுவினர் வேண்டுகின்றனர். (வெ-அ)

### இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் புதிய கட்டிடத் திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று மாலை நடைபெறும்.

இவ்விழாவிற்கு வடமாநில கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் தலைமை வகிப்பார். பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கூன் கலந்துகொள்வார். (வெ)

# கல்வித்துறையில் இலங்கை

## உலகிலேயே முதலிடத்தைப் பெறும்

### கல்விச்சேவை அமைச்சர் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

"கீழைத்தேச நாடுகளிலேயே கல்வித்துறையில்இரண்டாம் இடத்தைவகிக்கும்இலங்கைத் தீவு இலவச பாடநூல் விநியோகத்தால் உலகிலேயே முதலிடத்தைப் பெறவுள்ளது."

இவ்வாறு கல்விச் சேவைகள் அமைச்சர் திரு. லயனல் ஜெயதிலக்கா யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இலவச பாடப்புத்தக விநியோகம் தொடர்பான மகாநாட்டில் பேசுகையில் கூறினர்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் யாழ். அரசாங்க அதிபரும், யாழ். மாவட்டச் செயலாளருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி, எதிர்க்ககட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், நல்லூரர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், கிளிநொச்சி எம். பி. திரு.வி. ஆனந்தசங்கரி ஆகியோரும், கல்வித்திணைக்களஅதிகாரிகள், கல்லூரி அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தவர்கள், மாணவர்கள் மற்றும் பலரும் பெருந்தொகையாக இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

அமைச்சர் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

"குளியாப்பிட்டியில் சுமார் 50 தமிழ் குடும்பங்கள் இருக்கின்றன. நானும் எனது உறவினர்களும் அக்குக் குடும்பங்களுடன் சகோதர மனப்பான்மையுடன் வாழுகின்றோம்.

"இலவச புத்தகங்களை தோட்டப் பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், அரசினர் பாடசாலைகள் ஆகிய சகல பாடசாலைகளிலும் கல்வி கற்கின்ற 10 வகுப்புவரை கல்வி கற்கும் சகல மாணவர்களுக்கும் புத்தகங்களை இலவசமாக வழங்கும்படி ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

"புத்தாண்டிலிருந்து சகல பிள்ளைகளுக்கும் இலவச புத்தகங்கள் வழங்கவிருக்கிறோம். கீழ் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம்வரை 35 லட்சம் மாணவர்கள்கல்விகற்கிறார்கள் ஆரம்ப வகுப்பில் இருந்து பதினாம் வகுப்புவரை மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழங்க 1 கோடியே 22 லட்சம் புத்தகங்களை வெளியிட வேண்டியிருக்கிறது. 166 வகையான புத்தகங்களை உற்பத்தி செய்யவேண்டும். ஆனல் இதுவரை 55வகையான புத்தகங்கள் கூடதயாராகவில்லை.

"இலவச பாடப்புத்தக விநியோகத் திட்டத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர்முதல் சகலரும் ஆதரவு தந்தனர். புத்தகங்களை வெளியிடுகின்ற ஆசிரியர் களிலிருந்து கல்வி இலாக, வாளைச்சேனை காகிதத் தொழிற்சாலை, அரச அச்சகக் கூட்டுத்தாபனம் வரை சகலரும் ஆதரவு தந்துள்ளனர்.

அரசாங்க அச்சகத்தில் பல்வேறு கட்சிகளையும் கொள்கைகளையும் கொண்ட 8 தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. அவ்வாறு இருந்தபோதும் இவ்விடயத்தில் சகல தொழிற் சங்கங்களும் ஒன்றுபட்டுச் செயல்படுகின்றனர். அப்படியிருந்தும் சகல புத்தகங்களையும் ஜனவரியில் வழங்கமுடியும் என்று கூறமுடியாது. 1º-ம் திகதிக்கு முன் 8-ம் வகுப்புவரையான புத்தகங்களை மட்டுமே வழங்க முடியும்.

"கீழைத்தேய நாடுகளில் குறிப்பாகஇலங்கையில் அதிலும் யாழ்ப்பாணத்தில்தான் கல்விகற்றவர்கள் கூடுதலாக வாழ்கின்றார்கள்.

"ஒவ்வொரு ஆண்டும் 10 கோடி ரூபா புத்தக விநியோகித்திற்காக ஒதுக்கப்படும் ஒருவர் பாவித்த புத்தகத்தை அவர்களின் சகோதரர்களும் பாவிக்கக்கூடிய முறையில் மாணவர்கள் தங்களுக்கு வழங்கப்படும் புத்தகங்களை பாவிக்கப் பழகிக்கொள்ள வேண்டும்." இலவச பாடப் புத்தகங்கள் வழங்கும் தினமான இம்மாதம் 18-ம் திகதியை ஒரு தேசிய தினமாகக் கொண்டாட ஒவ்வொரு பாடசாலைகளும் முன்வரவேண்டும் என்றார். (கொ-சு)

## "நாட்டின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்" -- அமிர்

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் இந்த மாநாட்டில் பேசுகையில் கூறியதாவது:-

'நாட்டின் அபிவிருத்தி விடயத்தில் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு நாம் ஒருபோதும் பின் நிற்க மாட்டோம்.

'கடந்த காலங்களில் மக்கள் புதுவருடத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடிய அதே வேளையில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்போகின்றன வே. பாடப்புத்தகங்கள் கொப்பிகள் வாங்குவதற்குப் பெரும் தொகையான பணம் வேண்டுமே என்று ஏங்கித் தவித்ததை நாம் கண்டிருக்கிறோம்.

இவ்வருடம் அந்த நிலை மாறிவிட்டது. அரசு பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்க முன்வந்துள்ளதால் மக்கள் மகிழ்ச்சியுடன் புத்தாண்டைக் கொண்டாட முடியும். இந்தவகையில் அரசு மக்களுக்கு நல்ல ஒரு செயலைச் செய்துள்ளதை நாம் பாராட்டாமலிருக்கமுடியாது.

'வரவு - செலவுத்திட்டத்தில் நல்ல திட்டங்களை அரசு சமர்ப்பிக்கத் தவறினாலும் இலவச பாடப்புத்தக விநியோகம் மட்டும் மக்களுக்குப் பயனுள்ளதாக அமைந்துள்ளதை நாம் மட்டுமல்ல சகலரும் வரவேற்றுள்ளனர்.

பாடப்புத்தகங்கள் எல்லாவற்றையும் அரசு வழங்கவில்லை என்றும் சிலவற்றைத்தான் அரசு வழங்க முன்வந்திருப்பதாகவும் அறிகிறோம். சில பாடப்புத்தகங்களை மட்டும் அரசு வழங்க முன்வந்ததால் மிகுதிப் புத்தகங்களை வாங்க மக்கள் தனியார் கடைகளையே நாடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும். அப்போது வியாபாரிகள் மக்கள் வாங்கும் புத்தகங்களில் கொள்ளை லாபம் அடிக்க முன்வருவார்கள். கொள்ளை லாபம் அடிப்பதைத் தடை செய்யும் [illegible] செய்யவேண்டும்.' (கொ-சு)

## வடமராட்சிப் பாடசாலைகளில்

# புதிய புத்தகங்களையே அரசு வழங்கும்

### எம். பி. யின் கோரிக்கைக்கு அமைச்சர்பதில்

(யாழ்ப்பாணம்)

"வடமராட்சிப்பகுதியில் அரசாங்கத்தால் மாணவர்களுக்கு வழங்கப்படவிருக்கும் புத்தகங்கள் என்றும் புதியனவாகவே இருக்கும். ஏனெனில் இப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் அவற்றைப் படிப்பிக்கப் போதிய ஆசிரியர்கள் இல்லை. எனவே அவர்களுக்கு வழங்கப்படும் புத்தகங்களை வருட முடிவில் மீண்டும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். அவற்றை மீண்டும் அரசு புதுப் புத்தகங்களாக விநியோகிக்கலாம்."

இவ்வாறு பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் நேற்று முற்பகல் யாழ். செயலகத்தில் நடந்த மகாநாடொன்றில் கல்விச் சேவைகள் அமைச்சர் திரு. ஜயதிலகாவுக்கு வடமராட்சிப்பகுதியில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நகைச்சுவையாக எடுத்துக் கூறினர்.

பாடசாலைப் பிள்ளைகளுக்குப் பழைய பாடப்புத்தகங்களை விநியோகிக்க உத்தேசித்திருப்பது பற்றிக் குறிப்பிட்ட திரு. துரைரத்தினம் எம். பி, பழைய புத்தகங்களை வடமராட்சிப்பகுதியில் விநியோகித்தீர்களானல் அதனல் பெரிதும் பாதிப்புக்குள்ளாகப்போகிறவர்கள் பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களாகவும்தானிருக்கும். இப்புத்தக விநியோகத்துக்கு ஒரு சீரான முறை கொண்டுவரப்பட வேண்டும். பழைய புத்தகங்கள் வசதி குறைந்த பிள்ளைகளுக்கும் சிறுபான்மையினருக்கும் கிடைத்துவிட்டால் அதிபர், ஆசிரியர்கள்தான் பாதிக்கப்படுவார்கள் என்றும் திரு. துரைரத்தினம் எடுத்துக் கூறியபோது குறுக்கிட்ட கல்விச் சேவைகள் அமைச்சர் திரு. ஜயதிலகா வடமராட்சியில் தாம் பழைய புத்தகங்களை வழங்கவில்லை என்றும் புதிய புத்தகங்களையே வழங்குவதாகவும்" [illegible] எம். பி. இதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

### வரப்பெற்றோம்

லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்.
லீலா மேசை தினக்குறிப்பு.
லீலா பாக்கட் தினக் குறிப்பு.

வழமைபோல் இம்முறையும் லீலா சித்திரக் கலண்டர்கள், அழகான வண்ணப் படங்களுடனும், பெரியார் நினைவு தினங்கள், நினைவு நாட்கள் சித்திரங்களுடனும், நாள், நட்சத்திரம், திதி, சமய விழாக்கள் பற்றிய தகவல்களுடனும் வெளிவந்துள்ளன. மாணவர்கள் முதல் சகலருக்கும் பயனுள்ள லீலா சித்திரக் கலண்டர்கள் வீடுகளிலும், அலுவலகங்களிலும் இருக்கவேண்டியது.

லீலா மேசை தினக்குறிப்பு நடைமுறைக்கு வரவிருக்கும் அலுவல் [illegible] சிலவற்றின் விபரம், 1979ம் ஆண்டின் வானியற் பஞ்சாங்கம், ஓய்வு [illegible] தொடர்பு மான அறிவித்தல் கட்டண விபரம், 80ம் ஆண்டின் விடுமுறை நாட்கள், அமைச்சர்கள், எம். பி.கள், இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ, விசேட நாட்கள், [illegible] முறை மாற்ற அட்டவணை, மாவட்ட அமைச்சர்கள் முதலிய சகல விபரங்களுடன் பக்கத்திற்கு இரு நாட்களாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அழகான பிளாஸ்டிக் கவர்கள் டயறிகளை அலங்கரிக்கின்றன.

லீலா பொக்கற் தினக்குறிப்புகள் அடக்கமான அளவில் முக்கிய விபரங்களைத் தாங்கி வெளிவந்துள்ளன. இப்பொழுது விற்பனையாகிக்கொண்டிருக்கும் சித்திரக் கலண்டர்கள், மேசைத் தினக்குறிப்புக்கள் பொக்கற் தினக்குறிப்புக்கள் சகலருக்கும் பயனுள்ளவை.

ஸ்ரீ.

## நாடும் நடப்பும்

இந்த வலகுணயா குருநாகல் புகழ் பெற்ற கண்டிய நடனக்காரர். ஐம்பத்தேழு உலக நாடுகளுக்கு அவர் சென்று கண்டிய நடனத்தின் புகழைப் பரப்பியவர் அவர்.

புகழ்பெற்ற இந்தக் கண்டிய நடனக்காரர் குணயா சமீபத்தில் காலமானர். இல்லை, அகால மரணமானர். அவரைப்பற்றியும் அவர் உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று கண்டிய நடனத்தின் புகழைப் பரப்பியதைப் பற்றியும் அவரது கலைத்திறன் பற்றியும் இப்போது பத்திரிகைகள் பலவும் பெரியபெரிய படங்களுடன் பக்கம்பக்கமாக கட்டுரைகள் வெளியிட்டு வருகின்றன.

கலைஞர் குணயா எப்படி காலமானர்? புகழ் பெற்ற கலைஞரின் சிறிய வீட்டில் எரிந்துகொண்டிருந்த குப்பி விளக்கு இரவில் தட்டுப்பட்டு விழுந்து தீப்பிடித்து அதில் அவரின் புகழுடம்பு கருகிவிட்டது!

புகழ்பெற்ற கலைஞருக்கு நேர்ந்த முடிவு வேதனை தருவது மட்டுமல்ல இலங்கையர் அனைவருமே வெட்கித் தலை குனியவேண்டும்.

கலைஞர் குணபா பற்றி சமீபத்தில் யூஸ்டஸ் விஜயதுங்கா என்ற பத்திரிகையாளர் எழுதியுள்ள கட்டுரையின் இறுதியில் சில வருடங்களுக்கு முன் கலைஞர் குணயாவுக்கு கொழும்பு கறுவாக்காட்டிலுள்ள ஒரு மண்டபத்தில் பாராட்டுவிழா எடுக்கப்பட்டது. அதில் கலந்துகொண்டவர்கள் கலைஞர் குணபாவின் திறமையையும் கலை உலகுக்கு அவர் ஆற்றிவரும் சேவையையும் வாயாரப் புகழ்ந்தனர். விழா முடிந்ததும் பாராட்டுரை வழங்கியவர்கள் தங்கள் கடமையை முடித்துக் கொண்டு தங்களின் ஆடம்பரக்கார்களில் ஏறிக்கொண்டு சென்றுவிட்டனர். சிறிது நேரத்தின் பின்னர் கலைஞர் குணயா கண்டிக்குப் போவதற்காக பஸ் நிலையத்தில் 'கியூவில்', மழைத் தூறல் தலையில் விழாமல் கையிலுள்ள பத்திரிகையொன்றை தலைக்கு மேல் பிடித்துக்கொண்டு நின்றதைக் காண முடிந்தது" என்று எழுதியிருந்தார்.

இந்நாட்டில் கலைஞர்களின் வாழ்க்கை இப்படித்தான் முடிவடையவேண்டுமா? கலைஞர்கள் தமது இறுதிக்காலத்திலேயாவது நிம்மதியாக வாழ்வதற்கு வழி வகுக்க இனியாவது ஒரு வழி காண முடியாதா? ஃ ஃ ஃ

கலைஞர்கள் புகழுடன் வாழும்போது அவர்களை பயன்படுத்துவதற்கென்று சிலர் இருப்பார்கள். பிற்காலத்தில் அவர்கள் கலைஞர்களைப் பற்றி ஏன் கவலை கொள்ளப்போகிறர்கள்?

நமது கலைஞர்களுக்குள் ஒற்றுமை இருந்தால் இந்த நிலைமை ஏற்படாது. கலை வளர்வதற்குப் போட்டி அவசியம் தான்; பொறுமை கூடாது. கலைஞர்கள் பலர் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனதற்கும், போவதற்கும் இந்தப் பொறுமையேதான் காரணமென்பதைக் கலைஞர்கள் எப்போது உணரப்போகிறர்களோ?

— ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திராசா மரணவிசாரணை

# இனிமேல் நீங்கள் தப்பமுடியாது என்று இன்ஸ்பெக்டர் கூறினர்

## மதியாபரணம் தொடர்ந்து சாட்சியம்

-- கா. யோகநாதன் -.

(யாழ்ப்பாணம்)

''இனிமேல் நீங்கள் தப்ப முடியாது'' என்று இன்ஸ்பெக்டர் கருணாரத்ன எங்களிடம் கூறினர். ஒரு வெள்ளைக் கடுதாசியில் கையெழுத்து போடும்படி சொன்னர்.''

யாழ். பருத்தித்துறை வீதியைச்சேர்ந்த இந்திரராசா என்ற இளைஞர் சிறைச்சாலையில் மரணமானது தொடர்பான மரண விசாரணையில், கொக்குவிலைச் சேர்ந்த மதியாபரணம் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

யாழ். நீதவான் திரு. எஸ். இராசசிங்கம் மரணவிசாரணையை நடத்தினர்.

பொலிஸ் தரப்பில் ஏ. எஸ். பி. இரத்னுயக்கா ஆஜரானர். இறந்தவர்தரப்பு நலனைக் கவனிக்கச் சட்டத்தரணி எஸ். நடராசா சட்டத்தரணி ஈ. பி. சேவியர் ஆகியோர் ஆஜரானர்கள்.

தன்னைப் பொலிஸ் ஜீப்பில் ஏற்றியபின் பொலிஸார் சுமார் அரைமணி நேரம் சோதனை நடத்தியதாகவும், வீட்டில் துவக்கு இருக்கிறதா? என்று பொலிசார் தேடியதாக பின்னர் தனக்குத் தெரியவந்ததாகவும் மதியாபரணம் கூறினர். அவர் தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது-

### கதைக்கமுடியாத நிலையில்

''பகல் 10 மணியளவில் ஜீப் புறப்பட்டது. ஜீப் யாழ்ப்பாணம் நோக்கிவந்தது. இன்ஸ்பெக்டர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் இறங்கிவிட்டார். எங்களை சிறைச்சாலைக்கு கொண்டு சென்ருர்கள். அங்கு இந்திரராசாவும் ஜெயேந்திரனும் கிடந்தார்கள். ராதா அடிக்கப்பட்டார் என்றும் எங்கு போட்டார்கள் என்று தெரியாதென்றும் சொன்னர்கள். இருவரும் கதைக்க முடியாத நிலையிலிருந்தார்கள். அவர்இறந்து விட்டார் என்று அடுத்தநாள் கேள்விப்பட்டேன். மேல்மாடியில்பொலிஸ்காரர் ஒருவர் குண்டாந்தடியும் மற்றொருவர் பெருவிரல் மொத்த கயிறும் வைத்திருந்தார். கயிறு தொங்கிக்கொண்டிருந்தது. அதற்குப்பக்கத்தில் இந்திராசா கிடந்தார்.

### குறுக்கு விசாரணை

ஏ. எஸ். பி. இரத்னுயக்கா மதியாபரணத்தைக் குறுக்குவிசாரணை செய்தார்.

கேள்வி: 13ம் தேதி அதிகாலை 2 மணிக்கு பொலிஸார் உம்மைத் தேடிவந்தார்களா?

பதில்: 13ம் தேதி இரவு 14ம் தேதி அதிகாலை.

கே: அன்று பொலிசாரை விட்டு வேறு ஆட்களும் வந்திருந்தனரா?

ப: இல்லை.

கே: பொலிசார் தான் வந்தார்களா?

ப: ஆம்.

கே: எத்தனை ஜீப்பில் வந்தார்கள்?

ப: 3 ஜீப்பில்.

கே: ஜீப்பிலும் பொலிஸாரா?

ப: இறங்கிவந்தார்கள் ஜீப்பிலிருந்தது யாரென்று தெரியாது.

கே. அது நன்ருகத்தெரியும்?

ப: ஆம்.

கே: அங்கிருந்து ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையம் சென்ருர்கள்.

ப: ஆம்.

கே: 3 ஜீப்பிலிருந்தும் இறங்கினர்கள்?

ப: இல்லை.

கே: எப்படித்தெரியும்?

ப: இரண்டு 'ஜீப்' வெளியே நின்றன.

ஏ. எஸ். பி. இரத்தினயக்கா தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்தார்.

கேள்வி: பொலிஸ் ஜீப் வந்தபோது வீட்டுக்கு வெளியிலும் ஆட்கள் நின்றதாக கூறினீர்?

பதில்: ஆம்.

கே: ஜீப்பில் பொலிஸார் கொண்டுபோனர்கள்?

ப: ஆம்.

### வேறு ஆட்கள் இல்லை

கே: ஜீப்பில் வேறு ஆட்கள் இருந்தனரா?

ப: இல்லை.

கே: மற்ற 2 ஜீப்பிலும் போனவர்களை தெரியாது?

ப: ஆம்.

கே: யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து சாவகச்சேரிக்கு போனபோது ஜீப்பில் எத்தனை வெளியாட்கள் இருந்தனர்?

கே. அவர்களின் பெயரை கூறமுடியுமா?

ப. சேனுதிராசா நகுலேந்திரன், பாலேந்திரன், மூர்த்தி இந்திரராசா.

கே. யாழ். பொலிஸ் நிலையத்தில் உமது ஜீப்பில் வந்த 9 பேரும் இருந்தனர்.

ப. எல்லோரும் இறங்கினர்கள்.

கே. மற்ற 2 ஜீப்பிலும் யாழ்.பொலிஸ் நிலையம் வந்தவர்களும் இறங்கினர்களா?

ப. ஆம்

கே. மற்ற 2 ஜீப்பிலும் பொலிஸாரை விடவேறு ஆட்களும் இருந்தார்களா?

ப. எங்களை முதலில் உள்ளே கூட்டிச் சென்று விட்டார்கள்.

கே. எல்லாரும் இறங்கி பொலிஸ் நிலையம் வந்தார்களா?

ப. ஆம்

கே. அவர்களில் வெளியாட்களும் இருந்தனரா?

ப. இரண்டு மூன்று பேர் இருந்தனர். எனக்கு அவர்களை தெரியாது.

### வெளியாட்கள் இருந்தனர்

கே. வீட்டிற்கு வந்த 2 ஜீப்பில் அந்த 3 வெளியாட்களும் இருந்திருக்ககூடும்?

ப. அவர்கள் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஏறினர்களோ தெரியாது

கே. உம்மை வீட்டிலிருந்து ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையம் கொண்டுபோனர்கள்?

ப. ஆம் அங்கு ஆட்கள் இருந்தார்கள் அவர்களையும் ஜீப்பில் ஏற்றினர்கள்.

கே. ஆதலால் வெளியாட்கள் எவரும் மற்ற ஜீப்பில் ஏறியிருக்கமுடியாது.

இக்கேள்வியை சட்டத்தரணி எஸ். நடராசா ஆட்சேபித்தார்.

நீதவான் வேறுவெளியாட்கள் மற்ற 2 ஜிப்பிலும் போனது தெரியுமா?

ப. தெரியாது

ப. ஆம்.

### அறையில் விட்டனர்

கே. சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு வரும்போது 2 ஜீப்பிலும் யாரும் ஏறினர்களா?

ப. என்னை அறையில் விட்டிருந்தனர்.

கே. மற்ற மூன்று நான்கு பேரும் 2 ஜீப்பிலும் ஏற்றப்பட்டனரா?

ப. நான் காணவில்லை.

கே. இரண்டாவது ஜீப் உமது ஜீப்பிற்கு பின்னல் வந்ததா?

ப. ஆம்.

கே. இரண்டாவது ஜீப்பில் யார் வந்ததென்று தெரியாது?

ப. தெரியாது.

கே. ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் உம்மை எதுவும் கேட்டார்களா?

ப. இல்லை.

கே. ஒன்றும் கேட்கவில்லையா?

ப. இல்லை.

கே. உமது வீட்டில் யார் இருந்தார்கள்?

ப. 2 பிள்ளைகள் மனைவி இருக்கவில்லை.

கே. உம்மை பொலிஸார் ஜிப்பில் ஏற்றியபின் என்ன நடந்தது?

ப. பொலிஸார் வீட்டுக்கு போய் அரைமணி நேரத்தால் வந்தனர். என்ன நடந்தது என்று தெரியாது.

நீதவான் பிறகு தெரிய வந்ததா?

### துவக்கு தேடினர்கள்

கே. என்ன தேடினர்கள்?

ப. துவக்கு வீட்டில் இருக்கிறதா என்று தேடினர்கள்.

கே: லொக்கப் அறையில் எவ்வளவு நேரம் இருந்தார்கள்?

ப: காலை 8 மணிவரை.

கே: காலை 5 மணிக்கு லொக்கப்பில் போட்டார்கள்?

ப: ஆம்.

கே: ராதா, ராஜேந்திரராசாவிடம் ஏதாவது கேட்டீரா?

ப: ஆம்.

கே: என்ன சொன்னர்கள்.

ப: பொலிஸார் பிடித்துக் கொண்டு வந்திருக்கிருர்கள்; என்னத்திற்கென்று தெரியாது என்ருர்கள்.

கே: எங்கு பிடித்தார்கள் என்று சொன்னர்களா?

ப: வீட்டில் வைத்துப்பிடித்தார்கள் என்று சொன்னர்கள்.

கே: ஆனைக்கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போது வழியில் ஜீப்பை நிற்பாட்டினர்களா?

ப: கொண்டலடி வயிரவர் கோவிலடியில் நிற்பாட்டி 2 பேரை ஏற்றினர்கள்.

### இரண்டு ஜிப் வந்தது

கே: ஆனைக்கோட்டையிலிருந்துயாழ்ப்பாணத்திற்கு எத்தனை ஜீப் வந்தது?

ப: 2 ஜீப்.

கே: வழியில் ஏற்றிய 2 பேரையும் சாவகச்சேரிக்கு கொண்டு வந்தார்களா?

ப: ஆம்.

கே: அவர்களுக்கு என்ன நடந்தது?

ப: தெரியாது.

## "பொலிஸார் எனது வீட்டில் துவக்குத் தேடினர்கள்"

கே. ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் எவ்வளவு நேரம் இருந்தீர்கள்?

ப. 20 நிமிடங்கள்.

கே. சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வெளியாட்கள் 3 பேரை கொண்டுவந்தது தெரியுமா?.

ப. ஆம் இப்போது தெரியும்

கே. அவர்கள் யார்?

ப: ராதா, ராதாவின் சகோதரன் ராஜேந்திரராசா.

கே: உங்களை அறைக்குள் விட்டபிறகு அவர்களை விட்டார்களா?

ப: ஆம்.

### லொக்கப் அறையில்

கே: எந்த அறையில்?

ப: ஆபீஸுக்கு முன்னுல் உள்ள 'லொக்கப்' அறையில்.

கே: அதற்குள் 9 பேர் இருந்தனரா?

ப: ஆம், வேறு ஒருவரும் இருந்தார். பின் அவனைக் கூட்டிச் சென்றுவிட்டனர்.

கே: அவரின் பெயர் என்ன?

ப: தெரியாது.

கே: அவரிடம் யாரைக் கேட்டீரா?

ப: இல்லை.

கே: அவனை விசாரித்தனரா?

ப: வெளியில் கொண்டு போனர்கள்.

கே: ராதாவை எப்படித் தெரியும்?- தெரியாது.

கே: பெயர் கேள்விப்பட்டீரா?

ப: இல்லை.

கே: மற்றப் பெயரும் தெரியாதா?

ப: ஆம்.

கே: ராதாவின் சகோதரனை தெரியுமா?

ப: தெரியாது.

கே: காணவுமில்லை?

ப: இல்லை.

கே. மற்ற 3 பேரும் யாழ் பொலிஸ் நிலையத்திலிருந்து வந்தவர்களா?

ப: ஆம். அவர்கள் நான், ராதா, ராதாவின் தம்பி, ராஜேந்திரராசா.

கே: ஒருஜீப் பொலிஸ்நிலையத்திற்குஉள்ளே வந்தது?

ப: ஆம்.

கே: அந்த ஜீப்பில்தான் நீர் போனீர்?

ப: ஆம்.

கே: அப்படியானல் மற்ற ஜீப்பிலிருந்தவரை செல்ல முடியாது?

ப: ஆம்.

கே: ஆனைக்கோட்டை பொலிஸுக்கு போகும்போது எத்தனை பொலிஸார் இருந்தனர்?

ப: 6 பேர்.

கே: சாரதியுடன்?

ப: ஆம்.

கே: உங்கள் வீட்டிற்கு எத்தனை பொலிஸார் வந்தனர்?

ப: இரவு நேரம் பயத்தில் கவனிக்கவில்லை. நான்கு, ஐந்து பேர் இருக்கும்.

கே: பொலிஸுக்கு உமது வீட்டை தெரியுமா?

ப: ஆம்.

கே: எப்படித் தெரியும்?

ப: விசாரித்துப் பார்த்திருப்பார்கள்.

கே: ஆனைக்கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் போய், பின்னர் சாவகச்சேரிபொலிஸ் நிலையம் சென்ருர்கள்?

ப: ஆம்.

கே: சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் 3 ஜீப்பிலிருந்து இறங்கினர்கள்?

ப: சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு 3 ஜீப் செல்லவில்லை. 2 ஜீப்தான் வந்தது. யாழ்ப்பாணத்தில் 1 ஜீப்நின்றுவிட்டது.

கே: சாவகச்சேரியில் எல்லோரும்இறங்கினர்கள்?

ப: ஆம்.

கே: உமது ஜீப்பில் பொலிஸார் மட்டும்தான் வந்தார்களா?

ப: மற்றவர்களும் வந்தார்கள். 4 பேர் வந்தனர்.

கே: ஜீப்பில் 11 பேர் வந்தார்கள்?

ப: இல்லை. சாவகச்சேரிக்கு 11 பேர் போகவில்லை.

நீதவான்: சாவகச்சேரிக்கு எத்தனை பொலிஸார் உமது ஜீப்பில் வந்தனர்?

ப: 3 பேர்.

நீதவான்: பொலிஸ் அல்லாதவர்?

ப: 6 பேர்,

கே: பொலிஸாருடன் வெளியாட்கள் வரவில்லை என்கிறீர்?

ப: ஆம்.

விசாரணை இம்மாதம் 8-ம் தேதி பிற்பகல்வரை பின் போடப்பட்டுள்ளது. ( )

### இசையும் கதையும்

(யாழ்ப்பாணம்)

இசைப்புத்தாண்டில் யாழ் மணிக்குரல் சேவையினர் அளிக்கும் 'ரகு விமலதாசின் ஒரு கொடியில் இரு மலர்கள்' இசையும் கதையும் இன்று மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது. (கொ-அ)

......

### ஒளிவிழாவும் கலை நிகழ்ச்சியும்

(உடுப்பிட்டி)

கரவெட்டி கத்தோலிக்க மக்களால் நடாத்தப்பட்ட 'ஒளி விழா' கரவெட்டி புனித அந்தானியார் ஆலய முன்றலில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் கரவைக் கத்தோலிக்க இளைஞர் மன்றத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (அ)

### 'ஈழநாடு' இந்திய தேர்தல் போட்டி

(1) தனிக்கட்சி அரசு கூட்டரசாங்கம்? ......

(2) ஆட்சி அமைக்கும் அரசு பெறும் மொத்த ஸ்தானங்கள்? ......

(3) தமிழ்நாட்டில் எக்கட்சிகூடுதல் ஸ்தானங்கள் பெறும்?......

(4) புதிய பிரதமர் யார்? ......

பெயர்: ......

விலாசம்: ......

......

கையொப்பம் ...... திகதி ......

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி:

தேர்தல் போட்டி

'ஈழநாடு' த. பெ. எண் 49,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் 'செல்வா' விட்டுச்சென்ற

# சமூக பொருளாதார ஆய்வு மீண்டும் தொடர்கிறது

சாவகச்சேரித் தொகுதியின் சமூக, பொருளாதார ஆய்வு மீண்டும் தொடர்ந்து நடைபெறவிருக்கிறது. காலஞ்சென்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறைப் பேராசிரியர் சோ. செல்வநாயகம் சாவகச்சேரிஎம். பி.யின் வேண்டுகோளின்பேரில் முன்னர் இவ்வாய்வினை மேற்கொண்டு நடத்திவந்தபோது இடையில் அவர் அகாலமரணமடைந்ததைத் தொடர்ந்து இவ்வாய்வு வேலைகள் ஸ்தம்பிதமடைந்தன.

இப்பொழுது இவ்வாய்வு வேலைகள் மீண்டும் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இந்த ஆய்வில் இத்தொகுதியின் கிராமிய, நகரப் பகுதிகளில் நிலவும் வறுமைநிலை, வேலையின்மை குறைந்தளவான வேலைவாய்ப்பு, சமூக ஒன்றிணைப்பு, கிராம, நகர ஏற்றத்தாழ்வுகள், நீர்ப் பிரச்னைகள் ஆகியவற்றுக்குக் கூடிய கவனம் கொடுக்கும்வகையில் கேள்விக் கொத்தில் கேள்விகள் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றை அடிப்படையாக வைத்து இவ்வாய்வின் முடிவில் தயாரிக்கப்படவிருக்கும் திட்டத்திற்கு இலங்கை அரசாங்கமும், பல வெளிநாட்டு நிறுவனங்களும் பெருமளவு பண உதவியும், ஏனைய உதவிகளும் அளிக்கவிருப்பதாகச் சாவகச்சேரி எம். பி.க்கு வாக்குறுதி அளித்துள்ளன.

சாவகச்சேரித் தொகுதியின் சமூக பொருளாதார நிலைபற்றிய இப்போதைய அறிவுடன் இக் கேள்விக்கொத்து தயாரிக்கப்பட்டிருப்பதுடன், இதனடிப்படையில் இத் தொகுதியிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தினதும் நிலைபற்றியும் அறிவதற்கான தரவுகள் சேகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் இத் தொகுதி மக்களின் சமூக பொருளாதார நிலை அறியப்பட்டு, மூலவளங்கள் மதிப்பிடப்பட்டு இவற்றின் அடிப்படையில் இத் தொகுதியின் விருத்திக்கான ஒன்றிணைந்த விருத்தித் திட்டமொன்றினை அமைப்பதே இதன் நோக்கமாகும்.

யாழ்ப்பாணம் திட்டமிடல் அமைச்சுப் பிரிவினர், அரசாங்க அதிபர், இத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரது உதவியுடன் ஏற்கனவே யாழ் பல்கலைக்கழக புவியியற் பகுதியினரால் தொடங்கப்பட்ட இவ்வாய்வு யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறையின் தலைவர் பேராசிரியர் டபிள்யூ. எல். ஜெயசிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ் ஆய்வு சம்பந்தமான நடவடிக்கைகளில் ஓரளவு காலதாமதம் ஏற்பட்டபோதிலும் சாவகச்சேரி எம். பி திரு. வி. என். நவரத்தினத்தின் முயற்சியினால் பல தடைகள் அகற்றப்பட்டு சமீபத்தில் இவ்வாய்வுக்கான கேள்விக்கொத்து ஒன்றை பேராசிரியர் ஜெயசிங்கமும், புவியியல் விரிவுரையாளர் திரு. இ. மதனாகரனும் தயாரித்துள்ளார்கள். இம்முயற்சிக்கு யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைத்தலைவர் திரு. என். பாலகிருஷ்ணனின் ஒத்துழைப்பும் அறிவுரையும் பெறப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக்கான தகவல்களைச் சேகரிப்பதற்காக தென்மராட்சிப் பகுதியின் மேற்குப் பகுதிக்கும், சாவகச்சேரி நகரசபைப் பகுதிக்கும் யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியல் பொருளியல் துறையைச் சேர்ந்த விரிவுரையாளர்களும் மாணவர்களும் மிக விரைவில் வீடு, வீடாகச் செல்லவுள்ளனர். இத்தொகுதியின் கிராமசேவை அலுவலர்கள், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர், படித்த மாணவர்கள் ஆகியோர் இவ் ஆய்விற்கு இவர்களுடன் சேர்ந்து ஒத்துழைப்பர். இவ்ஆய்விற்குத் தேவையான சரியான தகவல்களையும், விபரங்களையும் கொடுத்துதவுமாறு இத் தொகுதி மக்களை ஆய்வுக்குழு வேண்டுகின்றது. இதன்மூலம் பெறப்படும் விபரங்கள் உயர்கல்வி ஆராய்ச்சிக்காகவே பயன்படுத்தப்படுமென்றும், எந்தவிதமான ஏனைய தேவைகளுக்கும் கொடுக்கப்படாது அந்தரங்கமாகப் பாதுகாக்கப்படுமென்றும் இவ் ஆய்வுக்குழுவின் தலைவரும், இத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும் இதுசம்பந்தமாக வெளியிட்டுள்ள அறிக்கையில் உறுதியளித்துள்ளனர்.

இலங்கையில் இத்தகைய ஒரு முயற்சிக்கு இவ் ஆய்வே முன்னோடி என்பதனால் இதன் வெற்றி இத்தொகுதி மக்களின் பூரண ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளதென்றும் அவர்கள் இவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளனர். (வெ)

Robin

Robin Kerosene Engine



வட இலங்கையில் விவசாயத்தில் முன்னணி வகுப்பது
'றெமன் சென்றிக்' வாட்டர் பம்புகளே ஏவ்விதமான
ஆழமான கிணற்றிலிருந்தும் இலதவில் நீரை
வெளியேற்றுவதே இதன் சிறப்பியலாதும்.
உங்கள் விவசாய தேவைகளுக்கு இன்றே
நாடுங்கள் நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்
மற்றும் மின்சார நீர் இறைக்கும் பம்புகளுக்கும்.

நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

141-143, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம் 7018

இந்தியாவிலிருந்து

## 50 ஆயிரம் சைக்கிள்கள்

(கொழும்பு)

இந்தியாவிலுள்ள "ரூட் மாஸ்டர்" நிறுவனம் இலங்கைக்கு 50,000 சைக்கிள்களை கேள்வி அடிப்படையில் ஏற்றுமதி செய்யவுள்ளது.

மேலும் 850,000 சைக்கிள்களை இலங்கைக்கு விநியோகம் செய்வதற்கான கேள்விக் கட்டளைகளையும் இந்நிறுவனம் எதிர்பார்த்துள்ளதாக அதன் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். எண்ணெய் விலை உயர்வுஏற்பட்டுள்ள இக்காலகட்டத்தில் இலங்கையின் போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்க இச் சைக்கில்கள் பயன்படுமென தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வெ)

## புத்தாண்டில் நிவாரணம் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

"ஆசிரியர் பற்றுக்குறையாலும், சிறப்புத் தகைமையுடைய ஆசிரியர்கள் குறிக்கப்பட்ட சில பாடங்களில் போதாமையினாலும், கல்வி நிலையில் குறிப்பாக உயர் கல்வி நிலைமைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களுக்குப் புத்தாண்டில் நிவாரணம் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் புத்தாண்டையொட்டி விடுத்துள்ள செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஆசிரியர்களை எதிர்நோக்கியுள்ள பலதரப்பட்ட பிரச்னைகளான தகைமைக்கேற்ற பதவியுயர்வின்மை, சேவை முதிர்ச்சிக்கேற்ற சம்பள உயர்வின்மை, நீண்டகால இடமாற்றமின்மை, போதியளவு ஆசிரியர் இன்மையால் உண்டான வேலைப்பளு போன்றன ஆசிரியர் மத்தியில் ஒரு பெரும் விரக்தி நிலையைத் தோற்றுவித்துள்ளது. இந்நிலைமைகள் மாறி ஆசிரியர் சமூகம் நிவாரணம் பெற இவ்வாண்டு வழி பிறக்கும் என்று திடமாக நம்ப முடியுமென அவர் தெரிவித்துள்ளார்." (செ)

வவனியா- முல்லைத்தீவு

## புதிய பஸ் சேவையால் பயனில்லையாம்

(முல்லைத்தீவு)

வவனியா பஸ்டிப்போ வவனியாவிலிருந்து முல்லைத்தீவிற்கும், முல்லைத்தீவிலிருந்து வவனியாவிற்கும் ரயில்-பஸ் இணைப்புச் சேவை நடத்தப்பட்டுவருகிறது. அனால் இச் சேவை ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டதுபோல் வவனியா நெடுங்கேணி, ஒட்டிசுட்டான் பாதையால் முல்லைத்தீவை அடைந்து மீண்டும் அதே பாதையால் வவனியாவை அடைவதில்லை என்பதை முல்லைத்தீவு மாவட்ட பிரயாணிகள் சங்கம் வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் உயர் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது. குறித்த சேவை இப்பாதையால் நடைபெறுததால் முத்தையன்கட்டு திட்ட அரச ஊழியர்களும், விவசாயிகளும் சிரமமடைவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (வெ)

மகாஜனன்ஸ் வி. க. நடாத்தும்

## உதைபந்தாட்டப் போட்டி

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை மகாஜனன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும், யாழ். இளைஞர் தெரிவுக் கோஷ்டிக்குமிடையே அண்மையில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் மகாஜனன்ஸ் விளையாட்டுக்கழகம் 4-1 கோல்களால் வெற்றி பெற்றது. மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. அருட்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## பிரிவுபசாரம்

(மன்னார்)

முருங்கன் பகுதியில் நீண்டகாலமாகச் சேவை செய்து மக்களின் நன்மதிப்பைப் பெற்ற வைத்திய அதிகாரி திரு. என். ரே. சந்திரலிங்கம் இடமாற்றம் பெற்று செல்வதையிட்டு முருங்கன் இளைஞர் முன்னேற்றக் கழகத்தினர் பிரிவுபசாரவிழா நடாத்தி கௌரவித்தனர். (கு)

......

## இடமாற்றம்

(உடுப்பிட்டி)

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. சிகரபாலா ஹட்டனுக்கும், தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. குரூஸ் பாராளுமன்றத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

ஃ ஃ ஃ

(புலோலி)

வவனியா கட்டிடத் திணைக்கள அலுவலக உதவியாளர் திரு. எஸ். செல்வநாயகம் மதவாச்சி கட்டிடத் திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (அ)

## தலைவராகத் தெரிவு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தின் புதிய தலைவராக மானிப்பாய் முன்னாள் கிராம சபைத்தலைவரான திரு. எஸ். மார்க்கண்டு ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

சங்கத்தலைவரும், வடபிரதேச பயிர்க்காப்புறுதி இயக்குனருமான திரு. எஸ். சிவகுரு தலைமையில் நடைபெற்ற விசேட இயக்குனர் சபைக்கூட்டத்தில் இத்தேர்வு நடைபெற்றது. உபதலைவராக திரு. பி. அருமைநாயகம் தெரிவு செய்யப்பட்டார்.

## நலன்புரிச்சங்க உத்தியோகஸ்தர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் அலுவலக நலன்புரிச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் உதவி அரசாங்க அதிபர் திரு. செ. கணேஷ் தலைமையில் நடைபெற்றபோது சங்கத்தின் 80-ம் ஆண்டுக்கான உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் உ. அ. அதிபர் திரு. செ. கணேஷ், தலைவர் திரு. வ. க. சாம்பசிவம் (காணி உத்தியோகத்தர்) உபதலைவர்: திரு. என். சிவப்பிரகாசம் (லிகிதர், காணிப் பிரிவு), செயலாளர்: திரு. ஆர். விநாயகமூர்த்தி (லிகிதர், உணவுக் கட்டுப்பாட்டுக்கிளை), தனாதிகாரி: திரு. எஸ். சிவபாதசுந்தரம் (கி. சே. அலுவலர், யாழ். பட்டினப்பிரிவு).

உறுப்பினர்கள்: திரு. என். சிவரத்தினம் (லிகிதர், உணவுக் கட்டுப்பாட்டுக்கிளை) திரு. என் கணபதிப்பிள்ளை (கி. சே. அ. கண்டிக்குளி), திரு. எம். அமிர்தலிங்கம் (குடியேற்றத் திட்ட உத்தியோகஸ்தர்), திருமதி ஆர். சுந்தரகாந்தன் (திட்டமிடல் உத்தியோகஸ்தர்), திரு. எஸ். செல்லத்துரை (அலுவலக சேவையாளர்). (கொ-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரசியலில் எம்.ஜி.ஆருக்கு நிலையானபுத்தி கிடையாது"

## இ. காங்கிரஸ் தலைவர் மூப்பனார் கண்டனம்

(சென்னை)

"தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனுக்கு நெருக்கடிநிலை காலத்தில் இந்திரா சர்வாதிகாரியாகப்படவில்லை, இப்போது சர்வாதிகாரியாகத் தெரிகிறார்"

இவ்வாறு இந்திராகாங்கிரஸ் தலைவர் திரு. கருப்பையா மூப்பனார் நெல்லை மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல்பிரசார கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

ஜனதாவில் குழப்பம் ஏற்பட்டபோது எம். ஜி. ஆர். தேசாயை ஆதரிப்பதாக கூறினார். ஆனால் சில நாட்களில் தேசாய் கவிழ்ந்துவிட்டதும் சரண்சிங்கை ஆதரிப்பதாக கூறினார். அவரது மந்திரி சபைக்கும் ஆபத்து ஏற்பட்டுவிட்டது. இப்போது ஜெக ஜீவன்ராம் பிரதமராக வர வேண்டுமென்று கூறுகிறார்.

"அரசியலில் எம். ஜி. ஆருக்கு நிலையான புத்தி கிடையாது. அவர் ஆதரவு கொடுத்த யாரும் உருப்பட்டதும் கிடையாது." (கு)

# சோவியத் படையெடுப்பு சீனாவுக்கு ஆபத்தாம்

(பீக்கிங்)

ஆப்கானிஸ்தானின் அயல் நாடான சீனாவுக்கு சோவியத் படையெடுப்பு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று சீனா அறிவித்துள்ளது. சோவியத் படையெடுப்பு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ள சீன துணைப் பிரதமர் சோவியத் துருப்புக்கள் உடனடியாக வெளியேறவேண்டும் என்று கேட்டுள்ளார்.

இதேவேளையில் பாகிஸ்தானைப் பாதுகாக்க அமெரிக்கா பலாத்காரத்தைப் பிரயோகிக்கவேண்டியநிலை ஏற்படும் என்று அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை செய்துள்ளது. (ஏ)

# 'இந்திரா ஆட்சிக்குவந்தால் ஜனநாயகத்துக்கு ஆபத்து'

## தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். எச்சரிக்கை

(சென்னை)

"இந்திரா காங்கிரஸ்-தி. மு. க. கூட்டணி மத்தியில் ஆட்சி அமைக்குமானால் ஜனநாயகத்துக்கு மாபெரும் ஆபத்து ஏற்பட்டுவிடும்"

இவ்வாறு தமிழக முதலமைச்சரும் அ. தி. மு. க. தலைவருமான திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தஞ்சாவூரில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"திருமதி இந்திராகாந்தி தலைமையிலான இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு வருமானால் அடுத்த பதினைந்து ஆண்டுகளுக்கு இந்தியாவில் தேர்தலே நடைபெறாது என்பதை மக்கள் மறந்துவிடக்கூடாது.

தி. மு. க. தலைவர்கள் தங்கத்தின் விலையுயர்வை தமது பிரசார கருவியாகப் பாவித்து வருகின்றனர். உண்மையில் தங்கத்தின் விலைபுயர்வுக்கு காரணம் உலக சந்தையில் அதன் விலையேற்றமே என்பதைக் கூட அந்தத் தலைவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லையே" என்றார்

### மனோகரன் உரை

நிதியமைச்சர் திரு. கே. மனோகரன் பேசுகையில் கூறியதாவது:

"இந்திரா காங்கிரசுடன் தி. மு. க. சேர்ந்துகொண்டதன்மூலம் அது பெருத்த அரசியல் அநாகரீகம் புரிந்துவிட்டது. பிராந்தியக் கட்சிகளை ஒழித்துவிடுவது என்பதையே தனது இறுதி லட்சியமாகக்கொண்டவர் திருமதி இந்திராகாந்தி. அவருடன் பிராந்தியக் கட்சி ஒன்றிணைவதா?

"திருமதி காந்தி ஆட்சிக்கு வருவாரேயானால் இந்த நாட்டிலிருந்து நீதித்துறையும் பத்திரிகைச் சுதந்திரமும் அழிக்கப்பட்டுவிடுவதுடன் தனியார் சுதந்திரமும் பறிக்கப்பட்டுவிடும்." (கு)



# அ. தி. மு. க. வில் சேர்ந்தார்

(சென்னை)

தமிழக சட்டசபையின் முன்னாள் அமைச்சர் திரு. முத்துச்சாமி அ. தி. மு. க. வில் சேர்ந்துகொண்டார்.

நேற்று தஞ்சாவூரில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் முன்னிலையில் அவர் அ. தி. மு. க. உறுப்பினராகச் சேர்ந்துகொண்டார். (கு)

......

# ஜனதா தலைவர் மறுப்பு

(புதுடில்லி)

ஜனதபக் கட்சிக்கும் காங்கிரஸ்கட்சிக்குமிடையே எதுவித இரகசிய உடன்பாடும் இல்லை என்று ஜனதாக் கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

......

# "தொழிலூக்கத்திற்கு வங்கிக்கடன் வழங்குக"

(கிளிநொச்சி)

"சிறு கைத்தொழில், தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்கு வங்கிகள் கடன் வழங்க வேண்டும்" என்று கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி, இலங்கை வங்கிக் கிளிநொச்சிக் கிளையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது குறிப்பிட்டார்.

இலங்கை வங்கிக் கிளிநொச்சிக் கிளை திரு. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் வடபிராந்திய முகாமையாளர் திரு. ஜெகநாதனும் கலந்துகொண்டு பேசினார். (ஈ)

# "இந்திரா அரியணை ஏற தி. மு. க. ஒரு படிக்கட்டு"

## -- சிவாஜிகணேசன்

(பழனி)

"இடுக்கண் ஏற்படும்போது துணை நிற்பதுதான் நட்பு, அந்த நட்பிற்கு இலக்கணமானவர் கலைஞர் கருணாநிதி. அன்னை இந்திராவுக்கும் காங்கிரசுக்கும் இடுக்கண் வரும்போது கலைஞர் துணைநிற்கின்றார். இந்திரா அரியணை ஏறுகிறார் என்றால் அதற்கு தி. மு. க. படிக்கட்டாக இருக்கிறது"

இவ்வாறு பழனி தேடடித் திடலில் நடைபெற்ற தேர்தல் கூட்டமொன்றில் நடிகர் சிவாஜிகணேசன் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் "இந்தத் தேர்தல் விசித்திரமானது. ஏனென்றால் மத்தியில் ஆட்சி அமைக்க மக்கள் 5 வருடகால அனுமதி கொடுத்தும், ஜனதா கட்சியால் ஆட்சி நடாத்தமுடியவில்லை. காரணம், வாஜ்பாய் சரண்சிங், மொரார்ஜி இவர்களெல்லாம் பல கட்சிக்காரர்கள். பல கொள்கையைக் கொண்டவர்கள். அவர்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டார்களே ஒழிய மக்கள் தேவையைப் பூர்த்தி செய்யவில்லை." (ந)





இப்போதோ எந்தத் தொல்லையும் இல்லை...












மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:
பொறியியல், விற்பனை, சேவைப் பிரிவு,
ஹேலீஸ் லிமிட்டெட்
25, பொஸ்டர் ஒழுங்கை, கொழும்பு 10.
தொலைபேசி: 96331-6.

HAYLEYS

நடமாடும் பழுதுபார்ப்புச் சேவை வண்டி, தேவையான சகல மாற்றுப்புகளுடனும் கிராமங்களின் ஊடாக அடிக்கடி பயணம் செய்கிறது.




Mel ADS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**REGAL** (Jaffna)
Daily at 2-30, 5-30, 7-00 & 9-30 P. m.

**Thats Entertainment Part-2**

100வது வெற்றித் திருநாளை நோக்கி ஓடுகிறது!
மனோஹரா யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, சுஜாதா, சந்திரமோகன், கவிதா நடித்த
**அந்தமான் காதலி**
(வர்ணப்படம்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி: 10.30, பி.ப. 2.30, 6.00, 9.30
சிவாஜி, ஜெயலலிதா ஜி. வரலட்சுமி நடித்த
(புத்தம்புதிய பிரதி)
**தாய்**

**வெலிங்டன்** தினசரி 3 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) சனி, ஞாயிறு 4 காட்சிகள்
**CASSENDRA CROSSING**

**லிடோ** தினசரி: 10-30, 2-30, 4-30, 7-00, 9-30
(யாழ். நகர்) போன்: 7693
SUPER COPS
(More suited for adults)

**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
நடிப்புக்கு ஈடுஇணையாருமில்லை என சவால்விட்டுநடிக்கும்சிவாஜி
அதற்கு ஈடுகொடுக்கும்
கே. ஆர். விஜயா
மனோரமா
தேங்காய் சீனிவாசன்
நடிக்கும்



**ஜெனரல் சக்கரவர்த்தி**
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்
குடும்பத்துடன் பார்க்கவேண்டிய படம்

100-வது வெற்றித்திருநாளைநோக்கி
**சாந்தி** (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
போன்: 7612
ஜெய்சங்கர் ஸ்ரீதேவி எம். ஆர். ராதா
அசோகன் ஸ்ரீகாந்த் மனோரமா சுருளி
நடித்த
**டாக்ஸி டிரைவர்**
வண்ணத்திரையோவியம்

A Hilarious Action Comedy Film For All Ages
**RANEE** (JAFFNA) Daily at: 10-30, 2-15, 4-45, 7-15 & 9-45 p.m.
Terrence Hill Bud Spencer
Team up As A Pair Of Miami Beach
Combers Donning The Police
Unigorm Go About Busting
Cars And Crooks In Warner Brothers Presentation
**CRIME BUSTERS**

# 1978-ல் அரசகூட்டுத்தாபனங்கள் உற்பத்தி 10 சதவீதத்தால் உயர்வு

(நேற்றைய தொடர்ச்சி)

கிராமப்புறங்களில் நிறுவப்பட்டிருந்த இலங்கை வங்கியின் 390 வேளாண்மைப்பணிநிலையகிளைகள் ரூ. 1210 இலட்சம் கொண்ட தொகையைதிரட்டிய (10 சத வீத அதிகரிப்பு) அதேவேளையில் அவற்றால் வழங்கப்பட்ட முற்பணங்களின் மொத்தம் ரூ. 1830 இலட்சமாகும். இவற்றின் பெரும்பகுதி வேளாண்மைக் கொடுகடன்களாகவே விளங்கின. (பக்கம் 59-62)

## கைத்தொழில்

உண்மை நியதிகளில் கைத்தொழில் வெளியீடு முன்னைய இரு ஆண்டுகள் ஒவ்வொன்றின் 1 சத வீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1978ல் 11 சத வீதத்தால் வளர்ச்சியடைந்திருக்குமென மதிப்பிடப்பட்டது. 1978இல் தனியார்துறை கைத்தொழில் உற்பத்தி 14 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் அரசதுறையின் வெளியீடு 10 சத வீதத்தால் அதிகரித்தது. 1978ல் காணப்பட்ட என்றுமில்லாத இவ்வளர்ச்சிக்கு எத்தகைய முதலீடுகளோ காரணமல்ல. அதற்கு 1977இன் பொருளாதார சீர்திருத்தங்களே காரணமாகும். கைத்தொழில்களின்

1978ம் வருடத்திய மத்திய வங்கியின் பொருளாதார மீளாய்வு

இயலளவுப் பயன்பாட்டு வீதம் ஏறக்குறைய 17 சதவீதத்தாலும், தொழில் வாய்ப்புக்கள் 15 சத வீதத்தாலும் அதிகரித்தன. எவ்வாறாயினும் இறக்குமதிசெய்யப்பட்ட மூலப் பொருட்களில் கைத்தொழில்கள் தங்கியிருக்கும் நிலைமை பெருமளவில் அதிகரித்துள்ளது போல் தோன்றுகிறது. கைத்தொழில் ஏற்றுமதிகள் குறிப்பாக மட்பாண்டம், உடைகள், கைப்பணிப்பொருட்கள், பதன்படுத்தப்பட்ட உணவு வகைகள் ஆகியவற்றின் ஏற்றுமதிகள் 5 சத வீதத்தால் அதிகரித்தன. (பக்கம் 67-68)

1978 இல் கைத்தொழிலில் முதன்மை வளர்ச்சியினை அடிப்படை உலோக உற்பத்திகள் (43 சதவீதம்), மட்பாண்டம் (29 சத வீதம்) உலோகமற்ற கனிப் பொருள் உற்பத்திகள் (22 சத வீதம்) தாள் (10 சத வீதம்) உணவு (4 சத வீதம்) புடவைகள் (3 சத வீதம்) ஆகியதுறைகள் கொண்டிருந்தன. சிறிய நிறுவனங்கள் இறக்குமதிகளுடன் போட்டியிட முடியாத நிலையில் மூடப்பட்டமையே புடவைத்துறையில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சி வீதத்திற்குக்காரணமாக இருக்கலாம். கணிசமான அளவு பாதுகாப்பு இருந்த போதிலும் பெரும்பாலான இறக்குமதி முதலீட்டுக்கைத்தொழில்கள் குறிப்பாக உணவு பதன்படுத்தல், உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறி, கருவிகள் ஆகியவற்றின் துணைத்துறை போன்றன. இறக்குமதிகளின் மூலம் கடுமையானபோட்டி நிலைமைகளை எதிர்நோக்கின. அரசின், மர, ஒட்டுப்பலகை ஆகிய இரு அரச கூட்டுத்தாபனங்கள் உற்பத்தியில்வீழ்ச்சியை பதிவு செய்தமையால் மர மற்றும் மர உற்பத்திக் கைத்தொழில்கள் தொடர்ந்து இரண்டாவது ஆண்டிலும் வீழ்ச்சியைக் காட்டின. (பக்கம்69-74)

உண்மை நியதிகளின் அடிப்படையில் அரசகைத்தொழில் கூட்டுத்தாபானங்களின் உற்பத்தி 1977-ம் ஆண்டின் 3 சதவீதம் கொண்டதொரு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1978 ல் 10 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து காணப்பட்டது. சீமெந்து, டயர், உருக்குக் கூட்டுத்தாபனங்கள் தமது உற்பத்தியில் கணிசமான அளவு அதிகரிப்பைப் பதிவு செய்தன. பல அரச கைத்தொழில்களின் இத்தகைய சிறந்த செயலாற்றத்திற்கு தொழில்நுட்ப முகாமைத்துவ சிக்கல்கள் தொர்டர்பாக நன்கமைந்த முடிபுகள் மேற்கொள்ளப்பட்டமை நடைமுறையில் கைத்தொழில் பிணக்குகள் காணப்படாமை முழுநேர தலைவர்கள் நியமிக்கப்பட்டமையின் விளைவாக செயல் விரிவுடைய நடவடிக்கள் எடுக்கப்பட்டமையுடன் புதிய முகாமையின் ஆர்வமிக்க தொழிற்பாடுகள் ஆகியன காரணமாகும். எவ்வாறாயினும் சில கூட்டுத்தாபனங்கள் தொடர்ந்தும் நன்கமைந்த தொழிற்பாட்டினை கொண்டிருக்கவில்லை. இவற்றுள் எண்ணெயும் கொழுப்பும் ஒட்டுப்பலகை, வன்கலம், மாஅரைத்தல், கனிப்பொருள் ஆகிய கூட்டுத்தாபனங்கள் உள்ளடங்கும். (பக்கம் 81-82)

1978 ல் அரசகைத்தொழில்களின் மூலதனச் செலவினம் ரூ. 16, 320 இலட்சமாகும். இதில் நான்கில் மூன்று பங்கு யூரியா வளமாக்கித் தொழிற்சாலைக்காகவும் நைலோன் திட்டத்திற்குமாகும். 1978 இறுதியில் இக்கைத்தொழில்களால் முதலிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 37,400 இலட்சமாக இருக்குமென மதிப்படப்பட்டது. (பக்கம் 84)

பல அரச கூட்டுத்தாபனங்கள் பெருமளவு பொருள் இருப்புக்களைக்கொண்டிருந்தன. இவ்விருப்புக்கள் கூட்டுத்தாபனங்களின் திரவத்தன்மையில் சிக்கலை ஏற்படுத்தி ஈற்றில் செலவினத்தைக் கணிசமான அளவில் கூட்டலாம். (பக்கம் 84)

அரச முயற்சிகளின் விலைக் கொள்கைகள் பெருமளவு முக்கியத்துவத்தினை வகித்துவந்த போதிலும், தற்போது அவற்றின் நிதி இலாபத் தன்மையைக்கொண்டே மதிப்பிட வேண்டும். உருக்கு, புகையிலைக் கைத்தொழில்கள், டயர் கூட்டுத்தாபனம் ஆகியன உயர்ந்த இலாபங்களைப் பதிவு செய்தன. பிடவை, சீமெந்து, மாவரைத்தல் ஆகிய கூட்டுத்தாபனங்கள் தம்மை நட்டம் ஈட்டுவதிலிருந்து இலாபம் ஈட்டும் நிலைக்கு மாற்றியுள்ளன. பால்சபையும், வன்கலக் கூட்டுத்தாபனமும் தொடர்ந்து கணிசமான அளவு இழப்புக்களையே கொண்டிருந்தன. (பக்கம் 85)

## பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள்

1978ம் ஆண்டு மீளாய்வில் மற்றைய முதன்மையான மாற்றம் யாதெனில் போக்குவரத்து, வலு, அஞ்சல் தொலைத் தொடர்புகள், நலத்துறை, கல்வி ஆகிய துறைகளை உள்ளடக்கப் புதியதொரு அத்தியாயம் உருவாக்கப்பட்டமையேயாகும். (பக்கம் 89-105) இத்துறைகளுக்கு முதன்மை அளிக்கும் நோக்கில் விரிவான முறையில் விபரங்களை அளிப்பதற்கான முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டது.

(நாளை தொடரும்)

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
**நாகநந்தினி**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி-வாணிஸ்ரீ
**குலமா குணமா**

100-வது வெற்றித்திருநாள்நோக்கி
**ஸ்ரீதர்** (யாழ் நகர்) தினசரி காலை 10-30, பி. ப. 2-30, 6-15, 9-45
சிவாஜி கணேசன்-சுஜாதா நடித்த
(வெள்ளிவிழாச் சித்திரம்)
**தீபம்**
(வர்ணக்கலர்)

# இன்றைய பலன்

மார்கழிமாதம் 18-ம் திகதி
புதன்கிழமை
2-1-1980

மேடம்; பண விவகாரத்தில் முன்னேற்றம் காணப்படும். சகோதர வழியாலும் மகிழ்ச்சியுண்டு. புதிய தொழில்களை மனம் நாடும்.

இடபம்: ஆடம்பரமான செலவுகளைக் கட்டுப்படுத்தவும். திடீர் பிரயாணமும் ஏற்பட இடமுண்டு. நிதானப் புத்தி அவசியம்.

மிதுனம்: வாழ்க்கை மேடு பள்ளம் நிறைந்ததாக இருக்கும். ஆயுதங்களுடன் பழகுபவர் அவதானம்வேண்டும். நண்பர்களாலும் தொல்லையுண்டு.

கடகம்: மனம் நிறைந்த வாழ்க்கை. இனபந்துக்கள் கொண்டாட்டமும் உண்டு. விவசாயிகளுக்கு முன்னேற்றமான தினம்.

சிங்கம்: எதிர்பாராத விளைவுகளால் அவதிப்படுவீர்கள். துக்கச் செயதிக்கு இடமுண்டு. இராப் பயணத்தைத் தவிர்த்துக்கொள்ளவும்.

கன்னி: சிரமமான காரியங்களைக்கூட இலகுவாகச் செய்துமுடிப்பீர்கள். சிலர் வாழ்க்கையில் பொதுசனத் தலைமையும் கிடைக்கலாம். வெளியிடத் தொடர்பும் சிறப்பைத் தேடித்தரும்.

துலாம்: குடும்பத்தில் உறவு முறைகள் சுமுகமாக இருக்கும். பழைய நண்பர்களின் சந்திப்பும் கிட்டும். தொழில் மாற்றத்திற்கும் இடமேற்படலாம்.

விருச்சிகம்: பூமி விவகாரம் தலைதூக்கி நிற்கும். இடைக்காலப் பிரிவுக்கும் இடமுண்டு. முன்னெச்சரிக்கையுடன் நடப்பது விரும்பத்தக்கது.

தனுசு: அன்பரின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும். காதல் ஜோடிகளுக்குப் பொன்னான தினம். தொழில் முன்னேற்றமும் உண்டு.

மகரம்: நம்பிக்கை மோசடிகள் நடக்கும். வாகனச் சாரதிகள் கவனம் செலுத்தவும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

கும்பம்: பெரியவர் ஒருவரின் அறிவுரை உங்களுக்கு நல் வழிகாட்டும். வெளியூர்ப் பதிவுமும் உண்டு.

மீனம்: கூட்டு வியாபாரத்தால் முன்னேற்றமுண்டு. குடும்பத்தில் சுபகருமங்களுக்கு இடமுண்டு. மகிழ்ச்சிகரமான தினம்.

திருமலை
க. வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாண சூறாவளி:

# 138 வழிபாட்டுதலங்களுக்கு 2 கோடி ரூபா வழங்கப்பட்டது!

(நமது மட்டக்களப்பு நிருபர்)

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்களைப் புனரமைப்பு செய்யும் பொருட்டு கலாச்சார அமைச்சினால் இரண்டு கோடி 5 லட்சத்து 37 ஆயிரத்து 618 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதி; மட்டக்களப்பு கலாச்சாரத் திணைக்களத்தின் மூலம், சேதமடைந்த வழிபாட்டுத் தலங்கள் 138க்கு வழங்கப்பட்டன. அந்நிதி வழங்கப்பட்ட வழிபாட்டுத் தலங்களும், ஒதுக்கப்பட்ட தொகையும் சிலவருமாறு:

மட்டக்களப்பு ஆனைப்பந்தி பிள்ளையார் கோவில் ரூ16,500 மாமாங்கப்பிள்ளையார் கோவில் ரூ. 20,250, ஏறுவூர் ஸ்ரீபத்திரகாளியம்மன்கோவில் ரூ. 11 500, வாழைச்சேனை பிள்ளையார் கோவில் ரூ. 11, 500, பாலமீன்மடு வேம்படி பிள்ளையார் கோவில் ரூ. 10, 2 0, கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் ஆலயம் ரூ. 14,750, பண்டாரியவெளி நாகதம்பிரான் ஆலயம் ரூ. 10, 250 , களுதாவளை பிள்ளையார் கோவில் ரூ. 19,00, ஏறுவூர் ஸ்ரீ சித்திரவேலாயுதர் கோவில் ரூ. 18,646, பெரிய புல்லுமலை சித்திவிநாயகர் ஆலயம் ரூ. 7,750, கல்லடி உப்போடை ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் குருகுல மண்டபம் ரூ. 31, 406, வாழைச்சேனை முஸ்லிம் பள்ளிவாசல் ரூ. 20,250, காத்தான்குடி நூருனியா பள்ளிவாசல் ரூ. 6,500, புளியடிக்குடா சென் செபஸ்தியான் தேவாலயம் ரூ. 30, 250, புல்லுமலைசெபமாலை மாத தேவாலயம் ரூ. 7,750, நாவற்குடா சின்ன ஊர்த் தேவாலயம் ரூ. 6,500, கோட்டமுனை மெதடிஸ்த தேவாலயம் ரூ. 7,750, ஜயந்திபுர மங்களாராமய ரூ.16,000, மங்களஓயா மங்களராமயா ரூ. 22,750 ஏறுஊர் மங்களராமய ரூ. 10,000, மட்டக்களப்பு மங்களராமய 12,000.

இந்நிதிஉதவிகள் தலநிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

---

## "அநீதிகளுக்கு எதிராக துணிந்து போராடுவோம்"

### சிறுவர் விழாவில் பண்டிதர்

(யாழ்ப்பாணம்)

ஒரு குழந்தை பிறந்தவுடன் பெயர் ஒன்றையும் குடியுரிமையையும் பெறும் தகுதியும் உரிமையும் அதற்கு உண்டென்று ஐக்கியநாடுகள் பிரகடனம் கூறுகின்றது. இன்று இலங்கையில் பிறக்கும் பல்லாயிரக்கணக்கான தமிழ்க் குழந்தைகள் குடியுரிமை இல்லாதனவாக பறிக்கப்பட்டனவாகப் பிறக்கின்றன. இந்த அநீதியை ஒழிக்க நாம் அயராமலும் அஞ்சாமலும் போராடல் வேண்டும்-

இவ்வாறுகரம்பொன்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்திய அனைத்துலகச் சிறுவர் ஆண்டு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தமது உரையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசியதாவது:

''ஊர்காவற்றுறைத் தொகுதிப் பாடசாலைகளில் முன்னூறுக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு இடமுள்ளது. யாழ்மாவட்டத்தில் 1500 ஆசிரியர்களுக்கு இடமுள்ளது. இருபத்திரண்டாயிரம் ஆசிரியர்களை நியமித்த சிங்கள அரசாங்கம் தமிழ்மக்களின் தொகைக்கு ஏற்ற விகிதப்படி எனினும் நாலாயிரத்து நானூறு தமிழர்களை ஆசிரியர்களாக நியமித்திருக்கவேண்டும். ஆனால் நானூறு தமிழர்கள் தாமும் ஆசிரியர்களாக முறைப்படி நியமிக்கப்படவில்லை. இந்தக் கொடுமையைச் செய்த அரசாங்கத்தின் அமைச்சருக்கு இங்கே வரவேற்பு. இந்த இளிசெயலை இனிமேலாகுதல் நாம் தடுத்து நிறுத்தவேண்டாமா?

இந்த இழிநிலையை அகற்றுதற்கு எங்கள் ஈழநாட்டை மீட்டு இழந்த ஆட்சி உரிமையைப் பெறவே எங்கள் கட்சி போராடுகின்றது. எங்களை நாங்கள் ஆளவேண்டும் எனும் அரசியல் அடிப்படை உரிமையை மறக்கும் தமிழர்கள் மனிதப்பிறவிகளாக இருக்கமுடியாது. (கொ)

---

### காணவில்லை

இயக்கச்சியிலிருந்து சாவகச்சேரி வரும் வழியில் நேற்று முன்தினம் 25சிறீ 5821 இலக்க ட்ராக்டரிலிருந்து இருலைசென்ஸ் புத்தகங்களும் இன்சூரன்ஸ், வாகனவரிப்புத்தகங்களும் அடங்கிய பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர். சன்மானம் வழங்கப்படும். ச. நவரத்தினம், கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு. 4544

---

## வடபகுதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்லெண்ணத்தை வளர்ப்பதற்காக இக்கோஷ்டியினர் இங்கு வந்துள்ளதை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன். நல்லெண்ணத்தை வளர்க்கத் தேவையான உதவி செய்யத் தயாராக இருக்கவேண்டும்'' என்றார்.

பருத்தித்துறை நகரசபை உறுப்பினரும், நல்லெண்ணக் கோஷ்டித் தலைவருமான திரு. சந்திரசேகரம் கூறியதாவது:-

''சிங்கள - தமிழ் மக்களின் உறவை வளர்த்தாலே நாட்டினை அபிவிருத்திசெய்ய முடியும். இதனையே கருத்திற் கொண்டு இங்கு வந்துள்ளோம்.

''1948முதல் 1956ம்ஆண்டு வரை ஐக்கியதேசியக் கட்சி ஆட்சியிலிருந்தவரை நாட்டில் ஒற்றுமை நிலவியது. 1956 முதல் 1977 வரை நடந்த ஆட்சியின்போது ஒற்றுமை சிதறப்பட்டு, பிரிந்துவாழவேண்டிய நிலை உருவாகிவந்தது. ஐ. தே. கட்சியினர் பதவிக்கு வந்த பின் மீண்டும் ஒற்றுமை உருவாகி வருகிறது. இந்த ஒற்றுமையைக் கட்டி வளர்க்க வேண்டும்.''

(புலோலி நிரு)

---

## ஸ்ரீரமண...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

துறை வீதிவழியாக நல்லூர் கந்தசுவாமி கோவிலையடைந்து பின்னர், கோவில் வீதிஊடாக சட்டநாதர் வழிவலமாக திவ்விய ஜீவன சங்க மண்டபத்தை வந்தடையும். இவ் ஊர்வல பாதையில் இருமருங்கிலும் வதியும் அடியார்கள் அனைவரும் தத்தம் இல்லங்களுக்கும், வியாபார ஸ்தலங்களுக்கும், முன்பாக மங்கள விளக்கேற்றி பூரண கும்பம் அமைத்து பகவானின் திருப்படத்திற்கு அஞ்சலி செய்யுமாறு பணிவன்புடன் கேட்கப்படுகின்றனர்.

ஊர்வலம் மண்டபத்தை வந்தடைந்து நாளை மாலை 5-30 மணிவரையும், பக்திப் பாடல், அருணாசல புராண படனம், சத்சங்கம் ஆகியன நடைபெறும். மாலை 5-30 மணிக்கு சட்டத்தரணி திரு, சி. கனகரத்தினம் தலைமையுரை நிகழ்த்துவார். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சொற்பேருரை நிகழ்த்துவார். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் 'ஸ்ரீரமண விஜயம்' என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். பக்திப்பாடல், அர்ச்சனை, மங்கள ஆரத்தி ஆகியனவும் இடம்பெறும். (கொ)

---

## இந்தியாவின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குப்பதிவு நடைபெறும்.

### 226 தொகுதிகளில்

நாளை, மொத்தம் 226 தொகுதிகளில் முதல்கட்ட வாக்களிப்பு நடைபெறும். மிகுதியான 316 தொகுதிகளிலும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வாக்களிப்பு நடைபெறும்.

### முக்கிய தலைவர்கள்

நாளைய வாக்களிப்பு, பல முக்கிய தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகளில் நடைபெறுவது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்! திருமதி இந்திராகாந்தி, திரு. சரண்சிங், திரு. சவான், திரு. ராஜ்நாராயண், மற்றும் பல மாநிலமுதலமைச்சர்கள், முன்னாள் லோகசபை அங்கத்தவர்கள் ஆகியோரின் தொகுதிகளில் நாளை வாக்களிப்பு நடைபெறுகிறது.

முதல்கட்டத் தேர்தலில் நாடு முழுவதும் மொத்தம் 36 கோடி 90 லட்சம் பேர் வாக்களிப்பார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### தேர்தல் முடிவுகள்

வாக்குகள் எண்ணப்படும் வேலை 6ம் திகதி காலை ஆரம்பமாகுமென்றும் முடிவுகள் அன்று மாலைமுதல் அறிவிக்கப்படுமென்றும் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

## ★ தமிழ்நாடு

தமிழ்நாட்டில் உள்ள மொத்த லோகசபைத் தொகுதிகளின் எண்ணிக்கை 39 ஆகும். இவற்றில் நாளை நடைபெறும் முதல்கட்ட வாக்குப்பதிவு 19 தொகுதிகளிலும், மிகுதியாகவுள்ள 20 தொகுதிகளில் இம்மாதம் 6-ம் திகதியும் நடைபெறும்.

நாளை நடைபெறும் 19 தொகுதிகளிலும் மொத்தம் 103 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

### கட்சிரீதியாக

இவர்களில் கட்சிரீதியாக:

| | |
|---|---|
| ● அ.இ.அ.தி.மு.க.... | 12 |
| ● இந்திரா காங்... | 12 |
| ● தி. மு. க.... | 06 |
| ● லோகதள்... | 06 |
| ● ஜனதா... | 05 |
| ● (அர்ஸ்) காங்... | 03 |
| ● இந்திய கம்யூ.... | 02 |
| ● முஸ்லிம் லீக்... | 01 |

இவர்கள்தவிர 56 சுயேச்சையாளர்களும் நாளைய தேர்தலில் உள்ளனர்.

### முன்னாள்எம்.பிக்கள்

நாளை நடைபெறும் தேர்தலில் முன்னாள் எம்பிக்கள் 14 பேரும் உள்ளனர். இவர்களில் கட்சிரீதியாக அ. இ. அ. தி. மு. க-06, இந்திரா காங்-05, ஜனதா-01, இந்திய-கம்யூ-01, இவர்களுடன், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. குமரி அனந்தன் சுயேச்சையாகப் போட்டியிடுகின்றார்.

### நேரடிப் போட்டி

முதற்கட்டத் தேர்தலில் மொத்தமான 19 தொகுதிகளிலும், இரண்டு தொகுதிகளில் மட்டும் நேரடிப் போட்டி நடைபெறுகிறது. நாகபட்டினத்தில் தி.மு. கழக வேட்பாளர் தாழை கருணாநிதியும் இந்திய கம்யூ. வேட்பாளர் முருகையனும் மோதிக் கொள்கின்றார்கள். தென்காசி தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் அருணாசலமும் ஜனதா ஜெகந்நாதனும் மோதிக் கொள்கின்றனர்.

நாளைய தேர்தலில் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 1 கோடி 36 லட்சத்து 39 ஆயிரம். இவர்களில் ஆண்களைவிட பெண்கள் 1லட்சம் அதிகமாகும்!

---

## ஜனநாயக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜேத்தவன தூபி புனருத்தாரண வேலைகளை ஆரம்பித்து வைத்தார். இந்தத்தூபி, கிறிஸ்துவுக்கு முன் 1600 ஆண்டுகளுக்கு முன்னர் மகாசேன மன்னரால் ஸ்தாபிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி தமது உரையில் மேலும் கூறியதாவது:-

''இத் தூபி 1,600 ஆண்டுகளுக்கு முன்னர் மகாசேன மன்னனால் நிறுவப்பட்ட போதிலும், இப்பொழுது காணப்படும் ஒற்றுமையான நிலையில் இது கட்டப்படவில்லை. இன்று பேணிப் பாதுகாக்கப்படும் நாட்டின் ஒருமைப்பாடு, அன்று ஏற்படவில்லை.

இந்தநாடு சுதந்திரமடைந்த பின்னர்தான் நாட்டின் பொருளாதார, கலாச்சார வளர்ச்சியில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை ஒரு சிறியநாடு. அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் பின்பற்ற முடியாது போனாலும் வேறு வழிகள் மூலமாக பெரும் சாதனைகளை நாம் ஏற்படுத்த முடியும்.

''நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு புத்த பெருமான் நமக்கு அருளிய சகிப்புத்தன்மை அவசியமானது. எமதுநாடு ஜனநாயக கோட்பாடுகளில் மிகவும் நம்பிக்கை கொண்டது. ஜனநாயக பாரம்பரியம் பேணிப்பாது காக்கப்பட்டு வருவதற்கு பௌத்தமதம் ஒரு காரணம் என்று கூறலாம்.

''நமது நாடு ஒரு சிறியதாக இருந்தாலும் ஏனைய நாடுகளுக்கு ஒரு வழி காட்டியாகத் திகழ்கிறது. சகல பக்களுக்கும் நன்மை அளிப்பதே அரசாங்கத்தின் அடிப்படை நோக்கமாகும்.

''பத்திரிகைச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம், பலகட்சி ஆட்சி ஆகியவற்றை ஏற்படுத்தி தார்மீக சமுதாயத்தை நாம் உருவாக்கிவருகின்றோம். நமது சொந்த வளங்களை அழித்துவிடாமல், விஞ்ஞானத்தை வளர்த்து ஜனப்பெருக்கத்தைநாம் கட்டுப்படுத்த வேண்டும்'' என்றும் ஜனாதிபதி தமதுஉரையில்தெரிவித்தார். (ம)

---


## "ஈழநாடு" தேர்தல் போட்டி

இந்திய இடைக்காலத் தேர்தல் போட்டியில் கலந்துகொள்ள இறுதிநேர சந்தர்ப்பம்!

ஐயாயிரம் ரூபா பரிசுகளை வென்றெடுக்க உங்கள் போட்டிக்கூப்பனை அனுப்புவதற்கு

### நாளைதான் கடைசிநாள்!

● போட்டிக் கூப்பன்கள் நாளை மாலை ஐந்து மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். தபாலில்அனுப்ப முடியாதவர்கள், தங்கள் கூப்பன்களை நாளை மாலை ஐந்துமணிக்குப் பிந்தாமல், ''ஈழநாடு'' அலுவலகத்திலுள்ள தேர்தல் (கூப்பன்) பெட்டியில் சேர்ப்பிக்குமாறு வேண்டுகின்றோம். நாளை மாலை ஐந்து மணிக்குப் பின்னர் வரும் தேர்தல் போட்டிக்கூப்பன்கள் எக்காரணம்கொண்டும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.


---

## மரண அறிவித்தல்

### திருமதி ஞானம் திரவியம்

முன்னாள் வண்ணார்பண்ணை பெரியபுலம் அதிபர் திரவியத்தின் மனைவி இளைப்பாறிய ஆசிரியை ஞானம் அவர்கள் காலமானார். இவர் டாக்டர் பரமதேவா (வவுனியா) றதிதேவி (ஆசிரியை பெரியபுலம்), சரோசாதேவி (ஆசிரியை கண்டி சீனியர்), பத்மஜெயன் (என்ஜினியர் அமெரிக்கா), பத்மநபன் (லண்டன்) ஆகியோரின் தாயாரும், டாக்டர் கிருசாந்தி (வவுனியா), புவனபூஷணம் (ஆசிரியர், யா/ இந்துக்கல்லூரி), நவறண்ட் கோவிந்தராஜ் (கண்டி) இரத்தினமலர் ஆக்கிற்ரெக்ட் (அமெரிக்கா) ஆகியோரின் மாமியாருமாவர். அன்னாரது பூதவுடல் புதன்கிழமை 4 மணியளவில் 39/1,சிவப்பிரகாசம் வீதியிலிருந்து நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

4545

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜனவரி மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No GE/8948/78 The Eelanadu P. B. No. 49, Tlegram Eelandu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org